12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 23—7—1978 | இதழ் 46

புனித ராஜ்யம்

கலைஞர் கருணாநிதி

நாடக மேடையில் புகை சூழ்ந்திருக்கிறது. பெரிய பெரிய கொப்பரைகள் அவற்றிற்குரிய அடுப்புக்களில் கொதித்துக் கொண்டிருக்கின்றன. ஒரு சாய்வு நாற்காலியில் நொண்டி ஒருவன் உட்கார்ந்து கொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

அவனது பட்டுச் சட்டையும் பட்டு வேட்டியும்



பளபளவென மின்னுகின்றன, அடுப்புத் தீயின் வெளிச்சத்தில்! கந்தலாடை அணிந்த ஆண்கள் சிலரும் பெண்கள் சிலரும் ஏதோ பட்டைகளை நறுக்குவதும்-நசுக்குவதுமான வேலையிலும், கொப்பரைகளை ஜாக்கிரதையாகக் கவனிக்கிற பணியிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்,]

நொண்டி: டேய் குட்டி! டேய் தடிப்பசங்களா! சீக்கிரம் ஆகட்டும்... எவனாவது போலீஸ்காரன் வந்து தொலைய போறான்...

பெண்கள்: இதோ... ஒரு நொடியிலே முடிக்கிறோம் முதலாளி!...

நொண்டி: சரி... சரி... ஏ... சொக்கி!... இந்தாடியம்மா! அந்தப் பெரிய பாட்டில் இருக்கே... அதை எடு இப்படி!...

[சொக்கி ஒரு சாராயப் புட்டியை எடுத்து வந்து நொண்டியிடம் கொடுக்கிறாள்.]

நொண்டி: புட்டியைப் பார்த்துக் கொண்டே[உம்! கையிலே புட்டி! பக்கத்திலே குட்டி!

சொக்கி: (சிரித்துக் கொண்டே) அடேடே! நம்ப அண்ணனுக்கு அடுக்கடுக்காப் பேச வருதே' புட்டி! குட்டி!

நொண்டி: சொக்கி! இதபாரு என் திறமையை — இது வரையிலே நம்ப தயாரிக்கிற சரக்குமேலே ஏதாவது லேபிள் ஒட்டியிருக்கிறோமா? இல்லை; இல்லவே இல்லை! இப்பப் பாரு; எவ்வளவு பொருத்தமான லேபுளு!

சொக்கி: லேபிளா? நான் பார்க்கலியே அதை! அது என்ன லேபுளுங்க?

நொண்டி: பாரேன்' நீயே பாரேன்!... நீ லேபிளைப் பாரு... நான் பாட்டிலைப் பார்க்கிறேன்...

[என்றவாறு லேபிளைக் கிழித்து அவள் கையில் கொடுத்துவிட்டு- பாட்டிலை மடமடவென்று காலியாக்குகிறான்]

சொக்கி: இந்த லேபிளைப் பார்த்தா ஒரே குழப்பமாவுல்ல இருக்கு! தலை மாதிரியும் தெரியுது — மலைமாதிரியும் தெரியுது- மரம் மாதிரியும்தோணுது மாடு மாதிரியும்தோணுது அட, என்ன உருவந்தான் இருக்கு இந்த லேபிள்லேன்னு கண்டு பிடிக்க முடியலியே-

நொண்டி: ஏ, குட்டி சொக்கி; ஒனக்கு ஏதாச்சும் அறிவு கிறிவு இருக்கா? நம்ப தயாரிக்கிற நாட்டுச் சரக்கிலே ஒரு துளி நாக்கிலே பட்டு அது எச்சியிலே கலந்து... மனுஷன் குடல்ல போயி சேர்ந்துதுன்னா... அப்புறம் அவனுக்கு இந்த உலகத்திலே மரம் மாடாத் தெரியும்! மாடு மரமாத் தெரியும்- தலை மலையாத் தெரியும்— மலை...?

(சொக்கியிடம் நெருங்குகிறான்)

சொக்கி: (விலகிப் போய் நின்று கொண்டு) நான் உன்னை அண்ணன்னு கூப்பிட்டுகிட்டு இருக்கிறது நினைவிலே இருக்கட்டும். லேபுளைப் பற்றி மாத்திரம் சொல்லு- இப்படி ஒரு குழப்பமான லேபுள் எதுக்காக?

நொண்டி: (எழுந்து நின்று இளித்தவாறு) இப்ப, நம்ப நாட்டிலே குழப்பத்துக்குத்தான் அதிகமான செல்வாக்கு! தெளிவாகப் பேசுகிறவனை தெருவிலே நிறுத்திடுவாங்க. குழப்பமா பேசுகிறவனைக் கோயில் கட்டிக் கும்பிடுவாங்க? இந்த லேபிளுக்குப் பெயர் என்ன தெரியுமா?... புனிதராஜ்யம்! புனிதராஜ்யம்!! சொக்கி இதப்பாரு- இனிமே நம்ப சரக்குகளை எவனும் பிடிக்க மாட்டான்... ஏன் தெரியுமா? புனித ராஜ்யம் லேபிள் ஒட்டியிருக்குல்லே; இதைப் பார்த்தாலே போலீஸ்கார அதிகாரிங்க நடுங்குவாங்க!

சொக்கி: அப்புறம் ஏன்; யாராவது போலீஸ்காரங்க வருவாங்கன்னு நீ நடுங்கிக்கிட்டு இருக்கே?

காட்சி 2

நொண்டி: சில போலீஸ் அதிகாரிங்க ''கருர்'; பேர்வழிங்களா இருப்பாங்க... மாட்டிகிட்டா விடமாட்டாங்க...

சொக்கி: சரி! சரி!... நான் வேலையைக் கவனிக்கிறேன்...

நொண்டி: சொக்கீ!..., சொக்கீ...!

சொக்கி: என்ன?

நொண்டி: உனக்கு ஏன் சொக்கின்னு பேர் வந்துச்சு அதைச் சொல்லு...

சொக்கி: எனக்கு என்ன தெரியும்? எங்க அப்பா அம்மாவைக் கேட்கணும்...

நொண்டி: நான் சொல்றேன் காரணம்!... ஒரு காலத்திலே உன்கிட்ட நான் சொக்கப் போறேன்னு தெரிஞ்சி உங்க அம்மா அப்பா உனக்கு அந்தப் பேரை வச்சிருக்காங்க... என்ன சரிதானா?,..

(கையைப் பிடிக்கிறான்)

சொக்கி: (அவள் கையை விடுவித்தவாறு) சரிதான் கொப்பாரை கொதிக்குது விடு!...

நொண்டி: கொப்பரை மாதிரி என் நெஞ்சமும் கொதிக்குது ... ஏன் என் உடம்பே கொதிக்குது... உயிரே கொதிக்குது தொட்டுப் பாரேன் என் உடம்பை... (அப்போது ''டேய்' விடாதே'' என்ற பயங்கரக் கூச்சலுடன் ஒரு போலீஸ் அதிகாரியும், அவருடன் ஒரு போலீஸ் காரரும் வருகிறார்கள். அவர்கள் கைகளில் துப்பாக்கிகள் குறிபார்த்தபடி இருக்கின்றன.] நொண்டியும், அங்கு பணியாற்றிக் கொண்டிருப் பவர்களும், நடுநடுங்கிப்போகிறார்கள் நொண்டி போலீஸ் அதிகாரியின் அருகே வருகிறான்.

நொண்டி: என்ன வேணும் உங்களுக்கு?...

அதிகாரி: கள்ளச் சாராயம் காய்ச்சும் உன் கூட்டத்தைக் கூண்டோடு கைது செய்ய வேண்டும், அவ்வளவு தான்!

நொண்டி: மன்னிக்கணும்- 'மாமூல்' கொடுத்தா சமரகமாசப் போக மாட்டீங்களா?

அதிகாரி: ஆகா! என்ன வார்த்தை சொன்னாய்? ஊழலையும் லஞ்சத்தையும் ஒழிக்கப் புறப்பட்டிருக்கும் புனித ராஜ்யத்தில் இப்படியும் ஒரு திருஷ்டிப் பரிகாரமா?,.. உம்... இப்போது காய்ச்சப்படுகிற சாராயம்மட்டுமல்ல; இதற்கு முன்பு காய்ச்சப்பட்டு- கார் டயர்களின் டியூப்களிலும்- சைக்கிள் டியூப்களிலும் நீ ஒளித்து வைத்திருப்பதாகக் கூறப்படும் அந்தத் திருட்டுச் சாராயமும்வெளிவந்தாக வேண்டும்....

நொண்டி: சார்! இதோ பாருங்க எங்கள் சரக்கின் லேபிளை! புனிதராஜ்யத்தின் லேபிள் சார்!

அதிகாரி: ஆகா! ராஜ்யத்தின் பேரை வேறு கெடுக்கிறாயா?

நொண்டி: இதோ பாருங்க பச்சை! (கையைத் தூக்கி சட்டையை வழித்துக் காட்டுகிறான்.)

அதிகாரி: இந்தப் பச்சைக்கெல்லாம் நாங்க பயப்பட மாட்டோம்.

நொண்டி: சரி; இந்தப் பச்சையைப் பாருங்க சார்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

இதயம் பேசுகிறது!

பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் ஜூலைதிங்கள் 15. நாட்டிலுள்ள ஏடுகளெல்லாம் அவரது பிறந்த நாளை ஒட்டி அவரைப் பாராட்டியும் வாழ்த்தியும் எழுதியுள்ளன. அதே நேரத்தில் காமராசரைப் பாராட்டும் சாக்கில் பயணக்கதை எழுத்தாளர் ஒரு வர்தமது பத்திரிகையில் காமராசர் பெருமையைப் புலப்படுத்துவதாக எண்ணிக்கொண்டு சில நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்திருக்கிறார்.

பெருந்தலைவர் வாழ்க்கை வரலாற்றில் எத்தனை எத்தனை தியாக ஏடுகள், வீரச் செயல்களின் வீர வரிகள் அடங்கிய பக்கங்கள். நேர்மையின் சுவடுகள் பதிந்தவை இந்திய நாட்டின் தலைவிதியை நிர்ணயித்த அவரது ராஜதந்திர நடவடிக்கைகள் இன்னெரன்ன ஆயிரமாயிரம் ஆற்றலுக்கு எடுத்துக் காட்டுகள் இருந்தும்;

அவைகளெல்லாம் அந்த எழுத்தாளரின் மனதில் பதியவில்லை போலும்! காமராசரின் அரசியல் தொண்டில் ஏற்பட்டுவிட்ட சில தோல்விகள் மட்டுமே அவருடைய இதயத்தில் இடம்பிடித்துக் கொண்டுள்ளன அதை எடுத்துக்காட்டுவதில் அவரது உள்ளத்து உணர்வே பளிச்சிடக் காண்கிறோம்

உலக வரலாற்று ஏடுகளில் எத்தனையோ பக்கங்கள் கறைபடிந்துள்ளன துரோகத்தின் காரணத்தால் இந்திய வரலாறு — விதிவிலக்கல்ல!

அதேபோல்—

தமிழக வரலாற்றிலும் கறைபடிந்த சில ஏடுகளைக் காணலாம்

காமராசர் தமது அரசியல் ராஜதந்திர நடவடிக்கைகளின் தோல்விக்கான காரணங்களில் இந்திரா காந்தியைத் தலைமை அமைச்சராக ஆக்கியதும் ஒன்றாகும். தமது தலைமையை ஏற்றுத் தமது அறிவுரைப்படியும் ஆணைப்படியும் ஆட்சி நடத்துவார் இந்திராகாந்தி என்று அவர் போட்ட கணக்கு தப்பாகி விட்டது கட்சியின் கட்டுப்பாட்டை இந்திரா மீறியது மட்டுமல்ல அவ்வாறு மீறிய செயலும் தனது மனச்சான்றுக்கு உட்பட்டதே என்று கூறி நீதிக்குப் புறம்பாகவும் நடந்துகொண்டார் அப்படி நடந்துகொண்ட சம்பவங்களில் ஒன்றைத்தான் பயணக்கதை எழுத்தாளர் நாட்டுக்கு எடுத்துக்காட்டி தாம் நல்ல பெயர் எடுக்க முயன்றிருக்கிறார்

"காங்கிரசு பிரிந்து பழைய காங்கிரசு புதுக் காங்கிரசு என்று இரு கூறுகளாக இயங்கிக்கொண்டிருந்த நேரம் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் இரண்டு காங்கிரசுகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணமும் பரவலாக இருந்தது" என்று துணிந்து பொய் கூறி தமது ஆவர்த்தனத்தை ஆரம்பிக்கிறார்;

அந்த நேரத்தில் காமராசர் இந்திராகாங்கிரசோடு இணைய வேண்டும் என்ற இந்திராகாந்தியின் ஆவலை அடியோடு புறக்கணித்தார். கட்டுப்பாடு அற்ற இந்திரா காந்தியோடு இணைந்து செயல்படுவதை அறவே வெறுத்தார் இரண்டு கட்சிகளும் இணைய வேண்டும் என்ற இந்திராகாந்தியின் வேண்டுகோளை அடியோடு உதறித் தள்ளினார் காமராசர் மறைந்துவிட்ட பின்னர் இரண்டு கட்சிகளின் இணைப்பை விரும்பினார் காமராசர் என்று அன்றைய தலைமை அமைச்சர் இந்திரா காந்தி கேயபல்ஸ் போக்கில் புளுகத் தொடங்கினார்.

இதயத்தை வாடகைக்குக் கொடுத்துவிட்ட இந்த எழுத்தாளரைப் போன்றவர்கள் பொய்யை முதலாக வைத்து அன்றைய தினம் இந்திராவுக்கு ஆதரவாக 'கோரஸ்' பாடுவதில் கொஞ்சமும் தயக்கம் காட்டவில்லை.

"அப்போது கன்னியாக்குமரி — திருநெல்வேலி இரயில்வே இணைப்புத் திட்டத்தின் ஆரம்பவிழா நடைபெற்றது.

முதல்வராகக் கருணாநிதி இருந்தார் பிரதமர் இந்திரா காந்தி அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விருந்தார். அவரையும் அதே விழாவில் கலந்து கொள்ள வேண்டினர். 'அவர்' தயங்கினாலும் அந்தப் பகுதி எம். பி. என்ற முறையில் தவிர்க்க முடியவில்லை: நிகழ்ச்சியில் கலந்துகொண்டார் ஆனால் எல்லாரும் எதிர்பார்த்தது போல் 'அவரும்' — இந்திரா காந்தியும் பேசிக்கொள்ளவில்லை.'

'அவர்' என்று எழுத்தாளர் இங்கே குறிப்பிடுவது காமராசரைத்தான் தமது தந்தை பண்டித நேருவோடு அரசியல் நடத்திய தலைவரோடு, பிரதமர் ஆக்க முழுதும் காரணமாக இருந்தவரோடு கலந்து கொண்ட நிகழ்ச்சியின்போது மதித்துப் பேசாதது இந்திரா காந்தியின் அதிகார போதையை. அவரது ஆணவத்தை எடுத்துக் காட்டுகிறது. செய் நன்றி கொன்றவராக இந்திரா காந்தி அன்றைய தினம் நடந்துகொண்டார் என்று பொது மக்கள் கூட எண்ணிக் குமுறினர். அவரது ஆணவத்தை எண்ணி அருவருப்பு அடைந்தனர். மேலும் கதையைத் தொடர்கிறார்

"இதைப்பற்றி 'அவரிடம்' கேட்டபோது. ஒரே மேடையில் இருந்தும் அந்த அந்த அம்மா என்னை மதிச்சுப் பேசலேன்னேன் அப்புறம் நான் என்ன செய்றது ...? என்றார்.

சா. கணேசன்

காமராசர். அன்று நடந்த அந்த வேதனை மிக்க சம்பவத்தின் ஒரு பகுதியைப் பச்சையாகக் கூறினார் உண்மையை ஒளிக்காமல் ஊரார் அறியும் பொருட்டு இந்தத் துரோகத்திற்குத் துணை போய் விட்ட இந்திரா காந்தியின் போக்கினை எடுத்துக் கூறி உள்ளம் வெதும்பினார்.

அரசியலில் கண்ணியம் கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்று அறிவித்த அண்ணாவின் வாரிசு கலைஞர் — கழகத் தோழர்கள் உட்பட காமராசருக்கு அன்றைய தினம் ஏற்பட்ட அவமானத்தை எண்ணிக் குமுறினர். நாட்டு மக்களும் வேதனைப் பட்டனர்

இச்சம்பவத்தை இத்தோடு முடிக்கவில்லை. அதை இப்படியே முடித்து விட்டால் தனது 'தூயவர்' பணி எங்கே சிறக்காமல் போய்விடப் போகிறதோ என்று எண்ணிய அவர் கதையை மேலும் நீட்டுகிறார்

"இதை நான் டில்லிக்குச் சென்றிருந்தபோது இந்திரா காந்தி அவர்களிடமே சொல்லி நீங்கள் பேசாமல் இருந்ததைப்பற்றி 'அவர்' வேதனைப் பட்டார்" என்றேன். உடனே இந்திரா காந்தி, "இதில் என்மீது தவறு இல்லை. அவரை ஒரு கோடியிலும் என்னை ஒரு கோடியிலுமாக நாங்கள் பேசிக் கொள்ள முடியாதபடி உங்கள் சீஃப் மினிஸ்டர் கருணாநிதி உட்கார வைத்து விட்டார். கூட்டத்தில் பேசிய பின் நான் உடனடியாகப் புறப்படும்படியும் ஏற்பாடு. அந்த புரோக்ராமை மீறி என்னால் அவருடன் பேச முடியவில்லை" என்றார், இப்படிக் கதையைப் புனைகிறார் எழுத்தாளர்.

நெல்லை — குமரி இரயில் பாதை இணைப்புத் தொடக்க விழாவை தமிழக முதலமைச்சர்தான் ஏற்பாடு செய்தார் என்பது எவ்வளவு பெரிய பொய் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

மத்திய அரசு நடத்தும் விழாக்களுக்கு மாநில முதல்வரோ அல்லது மாநில அமைச்சர் ஒருவரோ அழைக்கப்படுவதுதான் மரபே தவிர மாநில அரசே முழுப்பொறுப்பு ஏற்றுக்கொண்டு விழாவை நடத்துவது என்பது இயலாத ஒன்று

மரபுப்படி அன்றைய மாநில முதல்வரான கலைஞரும் அந்த விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்பதுதான் உண்மை கலைஞர் சொல்படிதான் அந்த விழாவே ஏற்பாடு செய்யப்பட்டது என்பது பயணக்கதை எழுத்தாளரின் கயிறு திரிப்பேயாகும்

மத்திய அரசு நினைத்தால் மாநில முதல்வரையோ, மாநில அமைச்சர்களையோ அழைக்காமலே கூட விழாவை நடத்த முடியும். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு சென்னையில் நடந்த தொலைக்காட்சி நிலையத்திறப்பு விழா

சென்னையில் முதன் முதலாகத் தொலைக்காட்சி நிலையம் தொடங்கப்பட்டது தமிழ்நாட்டில் கழக ஆட்சி நடந்துகொண்டிருந்தபோதுதான் அப்போது அந்த விழாவுக்கு முதல்வர் கலைஞரே அழைக்கப் படவில்லை என்பதைப் பயண எழுத்தாளர் மறந்திருக்கமாட்டார்.

ஆனால் அந்த எழுத்தாளர் தனது கட்டுரையில் எழுதுகிற பாணி முதலமைச்சர் கலைஞரே அந்த விழாவை ஏற்பாடு செய்தது போலவும் விழாவில் காமராசர் எங்கு அமர வேண்டும், இந்திரா எங்கு அமர வேண்டும் என்று கட்டளையிட்டது போலவும் சித்தரித்துக் காட்ட முற்படுகிறார். இதயம் பேசுகிறது' படிப்போரை முட்டாள்களாக எண்ணிக் கொண்டு எழுத்தாளர் ஏமாற்றப் பார்க்கிறார்.

தொடர்ந்து எழுதும் வாசகர்களை அவருடைய பொய்யை ஊடுருவி வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது படியுங்கள் — அவரது கதை விடும் போக்கினை;

"இதை நான் மீண்டும் அவரிடம் வந்து சொன்னேன். உடனே அவர் சற்றுக் காரமாக. "எல்லாம் சும்மா கதைன்னேன்.. சீஃப் மினிஸ்டர் ஏற்பாடுபண்ணினா என்ன? என்னோட பேசணும்னு எண்ணம் இருந்தால், அதைஉடைச்சுட்டு வந்து பேசியிருக்கலாம், அப்புறம் நீ என்ன பிரைம் மினிஸ்டர்?" எல்லாம் சும்மா பேச்சு. பேசணும்னு மனசு இல்லே...பேசலே! அவ்வளவுதான். விடுங்கன்னேன்!' என்றார்.

'எல்லாம் சும்மா கதைன்னேன் என்று காமராசர் கூறுவதாக இவர் கூறுகிறார். இந்திராகாந்தி கலைஞர் மீது பழியைப் போட்டுக் கூறுவதாகச் சொல்லுவதும் கதை இவர் விடுகிற சரடும் கதை என்பதாகத்தான் பொதுமக்கள் எண்ணுவார்கள்.

அகில இந்திய காங்கிரசு பெங்களூரில் கூடியபோதுதான் இரண்டாகப் பிளவு பட்டது, அப்போது நிருபர்கள் கலைஞரைப் பார்த்துக் கேட்டார்கள், காங்கிரசு இரண்டாகப் பிளவுபட்டு விட்டதே அதைப் பற்றி தங்களுடைய கருத்தென்ன? என்று. அதற்கு கலைஞர் கூறினார் "இந்த நாட்டின் பெரிய கட்சியான காங்கிரசு பிளவுபடுவதை நான் விரும்பவில்லை; வரவேற்கவில்லை' என்று அரசியல் கண்ணியத்தோடு நாட்டின் நலத்தை எண்ணி பதில் கூறினார், 'இந்த பதிலை எதிர் பார்த்திராத பல நிருபர்கள் கூட வியந்து போயினர்; பாராட்டினர்; இது அன்றையதினம் வரலாற்றில் பதித்துவிட்ட பேருண்மை.

இந்தப் பேருண்மைகளை அறியாத பேதை கலைஞரைப்பற்றி மக்கள் மத்தியில் தவறுகப் படம்பிடித்துக் காட்ட முற்படுவதன் மூலம் அவரும் அவரது சகாக்களும் தோல்வியைத்தான் சுமக்க நேரும்;

இன்னும் சில நிகழ்ச்சிகளை தொடர்ந்து எழுதவிருக்கிற அந்த எழுத்தாளர் வஷம்கக்காமல் உண்மையான விஷயத்தை மட்டும் எழுதினால் அவருக்கும் நல்லது

புனிதராஜ்யம்...

(முதற் பக்கத் தொடர்ச்சி)

(ரூபாய் நோட்டுகளை எடுத்துக் காட்டுகிறுன்)

அதிகாரி: ஒகோ? ஒரு ஆயிர ரூபாயை வைத்துக் கொண்டு என்னை மடக்கி விடலாமென்று நினைக்கிருயா?

நொண்டி: எவ்வளவுக்கு சார் மடக்கலாம்?

போலீஸ்காரர்; இரண்டாயிரம் கூட இல்லேன்னு என்ன செய்ய முடியும்? எனக்கு ஐநூருவது வேண்டாமா?

நொண்டி; அப்படியா இதோ தர்ரேன் சார்! ஆளை விடுங்க...

(மடியிலிருந்து பணத்தை எடுத்து நீட்டுகிருன்)

அதிகாரி: லஞ்சப்பணம்' சே: அதை நான் கையால் தொடமாட்டேன். நீயே சட்டைப் பையில் வைத்துத் தொலை! அவன் பையில் ஐநூறைத் திணி! (நொண்டி அப்படியே செய்கிருன்)

(அப்போது அதிகாரியும் போலீஸ்காரரும் கலகலவென்று சிரிந்துக் கொண்டே- தங்கள் வேடங்களைக் களைகிருர்கள்! அதிகாரிக்குப் பதிலாக அண்ணாச்சியும்- போலீஸ் காரருக்கு பதிலாக பொடியனும் நிற்கிருர்கள்.)

நொண்டி: டேய்'... என்னை ஏமாத்திட்டிங்களா? பலே ஆளுடா நீங்க!...

'அண்ணாச்சி': எப்படி எங்க தமாஷ்!...

சொக்க்: அப்பாடா! (பெருமூச்சு விட்டவாறு) இந்த புனித ராஜ்யமே ஒரே தமாஷாத்தான் இருக்கு..

(எல்லோரும் சிரிக்கிருர்கள்... ரசிகர்கள் ஆரவாரம்... திரை விழுகிறது. இரண்டாம் காட்சி முடிகிறது.]

(மூன்ரும் காட்சி அடுத்த இதழில்)

கழக ஏடுகளையே வாங்குவீர்

நமது நம் இனத்திற்குத் துரோகம் செய்யும் பத்திரிகைகள்- நம் இனத்திற்குக் குழி வெட்டிக் கொண்டிருக்கும் ஏடுகளை யாரும் வாங்கக் கூடாது யாரும் அப்படிப்பட்ட ஏடுகளைப் படிப்பதோ- விமர்சிப்பதோ கூடாது என்னைப் பொறுத்தவரை நான் அப்படிப்பட்ட ஏடுகளைப் படிப்பதில்லை- நீங்களும் படிக்கக் கூடாது அப்படிப்பட்ட ஒரு வைராக்யத்தை நாம் ஏற்றால்தான் நமது இனஉணர்ச்சி ஏற்பட முடியும்.

நீங்கள் யார் என்று அடையாளம் காட்ட 15-ம் தேதி முரசொலி இல்லையா 10-ம் தேதி முரசொலியையாவது கையில் வைத்திருங்கள். முரசொலி — அலையோசை — நம்நாடு— இனமுரசு தினகரன் போன்ற இதழ்களையும்- நம் இனம் தெரிந்த பிற முரசுகளையும் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்

ஒருகாலத்தில் 'திராவிட நாடு' ஏட்டைக் கையில் வைத்துக் கொண்டு நம் இனத்தை அடையாளம் காட்டினோம்.

இப்போது நாம் ஒருவரை ஒருவர் அடையாளம் காட்டிக் கொள்ள கறுப்பு வண்ணத்தையும், கறுப்பு சிவப்பு வண்ணத்தையும் துணிகளின் மூலம் அடையாளம் காட்டுவதைப் போல நம் இனத்திற்காக பாடுபடும் ஏடுகளையே வாங்கிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பொதுச் செயலாளர் பேராசிரியர்

('இனமுரசு' வெளியீட்டு விழாவில்)

அந்தோ, தொழிலாளர் வர்க்கமே...!

கே. சுப்பு எம். எல். ஏ.

அம்பத்தூரிலுள்ள டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலைமூடப்பட்டு ஏழு மாதங்களுக்கு மேல் ஆகின்றன; திறப்பதற்கான அறிகுறி எதுவும் தென்படவே இல்லை

வேலையின்றி வாடும் தொழிலாளர்களுக்கு எந்தவித நிவாரணமும் அளிக்கப்படவில்லை; வேலை செய்த நாட்களுக்குக் கூட சம்பளம் வழங்கப்படவில்லை இதைவிடக்கொடுமை அவர்களுடைய கட்டாய சேமிப்புப் பணமும் கைக்கு வந்து சேரவில்லை.

போராட்டத்திற்கும்—பிரச்சினைக்கும் எந்த விதத்திலும் சம்பந்தப்படாத ரைட்சாடல்ஸ் தொழிலாளர்களுக்கும் இதே கதிதான்!

சட்டமன்றத்திலும்மக்கள் மன்றத்திலும் 'இந்தப் பிரச்சினை விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. எந்தக் கட்டத்திலும் தொழிலாளர்கள்துயர் துடைக்க அரசாங்கம் முன்வரவில்லை.

இதற்கிடையே சோஷலிச தொழிலாளர்பெற்றுநாடுகளில் வரும் நன்மைகளையெல்லாம் இரண்டே ஆண்டுகளில் புதிய சட்டங்களின் மூலம் தமிழகத்துத் தொழிலாளி வர்த்கத்துக்கும் பெற்றுத் தரப்போவதாக இராகவானந்தம் கூறுகிறார். எவ்வாறு இயலும் என்பதுதான நமக்கும் புரியவில்லை!

புரட்சித் தலைவரின் ஆட்சி அல்லவா? எதை வேண்டுமானாலும் சொல்லலாம்!

போக்கு வரத்துத் தொழிலாளர் போராட்டத்தின் போது வேலை நிறுத்தத் தடை அவசரச் சட்டத்தைத் தமிழக அரசு பிறப்பித்தது. அதுவும் போராட்டத்தை உடைக்க எல்லாவிதத் தயாரிப்புகளையும் செய்துவிட்ட பிறகுதான் பிறப்பித்தது.

ஏற்கனவே நடைபெற்ற போக்கு வரத்துத் தொழிலாளர் போராட்டத்தையும், மின்வாரிய ஊழியர்கள், அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள், விவசாயிகள் முதலானோருடைய போராட்டத்தையும் இதேமுறையில்தான் உடைக்க முயன்றது இதற்காக அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழிற்சங்க நடைமுறைகளை கூட காற்றிலே பறக்க விட்டது!

எல்லாவற்றுக்கும் மேலாக, வேலை நிறுத்தத்தடை அவசரச் சட்டத்தையும் பிறப்பித்தது அதுவும் 'மே' மாதத்திலேயே பிறப்பித்தது பெருமை இல்லையா?

வேலை நிறுத்தத்தடை அவசரச் சட்டத்தைத் திரும்பப் பெறுமாறு வற்புறுத்தி தொழிற்சங்கத் தலைவர்கள் பலரும் அறிக்கை விடுத்தனர். "தொழிலாளி வர்க்கம் முழுமைக்குமே எதிரான சட்டம்' என்றும் வருணித்தனர். இருந்தும் அந்தச் சட்டத்தை எதிர்த்து உறுதியாகவும், உண்மையாகவும் போராட யாரும் முன்வரவில்லை. 'அவசரச் சட்டத்தைத் திரும்பப் பெறும்வரை ஓயமாட்டோம்' என்று கூட சுவரொட்டிகள், ஒட்டப்பட்டன. எனினும் அந்தச் சுவரொட்டிகளின் பசை உலருவதற்கு முன்பே மதுரை மாநகராட்சித் தேர்தலுக்கு ஆளுங்கட்சியுடன் கூட்டணியும் அமைக்கப்பட்டது!

எனவே தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை தன்னந்தனியாகவே தமிழகமெங்கும் இயக்கம் நடத்த முடிவெடுத்தது. சென்னை, கோவை, திருச்சி, தூத்துக்குடி மதுரை, தஞ்சை போன்ற இடங்களில் தொழிலாளர் பேரணிகளை நடத்தியது. தொழிலாளி வர்க்கத்திற்கு எதிரான வேலை நிறுத்தத் தடை அவசரச் சட்டத்தை உடனே திரும்பப் பெறுமாறு வற்புறுத்தியது அந்த. அடிப்படையில் தான் 18-7-78 அன்று சென்னையில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்திலும் கலந்து கொண்டது. அதில் மற்றத் தொழிற்சங்கங்களின் நிலை என்ன!

முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகளே மூன்று தான்!

1 மூடிய டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலையை உடனே திறக்கவேண்டும்—

2 வேலை நிறுத்தத் தடை அவசரச்சட்டத்தை உடனே திரும்பப் பெறவேண்டும்.

கட்டாய சேமிப்புப் பணத்தை அனைத்துத் தொழிலாளர்களுக்கும் உடனே பெற்றுத் தர வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தித் தோழர் கோபு காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். அவருடைய உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக தொழிற்சங்க நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டு, 18-ம் தேதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. கட்சி, கருத்து வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து தொழிலாளி வர்க்கத்தின் நன்மைக்காக இந்தப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு நல்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தொழிலாளி வர்க்க விரோத அரசுக்கு எதிராக விண்ணதிர முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இருந்தாலும் வழக்கமான திரைமறைவு வேலைகளும் வேகமாக இடம் பெற்றன. வரலாறு கண்டிராத விதத்தில் வேலைநிறுத்த நாளை விடுமுறை நாளாக அரசாங்கமே அறிவித்தது. வேலை நிறுத்தத் தடை அவசரச் சட்டத்தைப் போராடும் தொழிலாளிகளுக்கெதிராகப் பயன்படுத்தாமல் இருக்கும் பொருட்டு சாமர்த்தியமாக விடுமுறையை அறித்தது.

வாய் வீரம் பேசிப் புறப்பட தொழிற்சங்கத் தலைவர்களை நெடுந்தொலைவுக்கு அப்பாலே நிறுத்திவைத்து சிலரை மட்டும் கோட்டைக்கு இட்டுச் சென்று 'புரட்சித் தலைவரைப் பார்க்கப் புதிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தது பின்னர் தொழிலாளர்களை கலைந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டது.

உடனடியாகத் தோழர் கோபுவின் உண்ணாவிரதமும் முடித்து வைக்கப்பட்டது.

"வெற்றி, வெற்றி" என்று வீதியெங்கும் ஒலிஎழுப்ப ஏற்பாடுகளும் நடந்தன.

இத்தனைக்கும் நிலைமையில் மாறுதல் எதுவும் ஏற்பட்டு விடவில்லை. கோரிக்கைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படவும் இல்லை. இருந்தும் இந்த வெற்று முழக்கம் ஏன்? அங்கே தான் அரசியலும் சூழ்ச்சியும் இணைந்து பிணைந்து நிற்கின்றன!

"டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை உடனே திறக்கப்படும் என்ற உத்தரவாதம் ஏதும் இல்லை. "முதலமைச்சரே நேரடியாக இந்தப் பிரச்சினையை கவனிப்பார்" என்று கூறப்பட்டதாம். அதுவும், 'மதுரை மாநகராட்சித் தேர்தல் முடிவுற்ற தருணத்தில் இறங்குவாராம். இத்தகைய வாக்குறுதியை அவர் ஏற்கனவே கொடுத்ததில்லை? சட்டமன்றத்தில் பேசியது இல்லையா? இருந்தும் இப்போது என்ன புதிய திருப்பம்?

வேலை நிறுத்தத் தடை அவசரச் சட்டத்தில் அரசாங்கம் தனது நிலையை மாற்றிக் கொள்ளவே இல்லை. அதனால் அவரைச் சந்திக்கச் சென்ற தலைவர்களே அதிருப்தி அடைத்திருக்கிறார்கள்பின்னர் எதிலே வெற்றி? ஏன் உண்ணாவிதரம் உடனே நின்றது என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது.

கட்டாய சேமிப்புப் பணத்திற்காகவும் போனஸ் சட்டத்திற்காகவும் மத்திய அரசுக்கு காட்டாயம் எழுதுவதாக முதல்வர் லாக்குறுயளித்தாராம் பெரிய சாதனைதான் வெற்றி வெற்றி!

டி ஐ சைக்கிள் மூடப்பட்ட

(10-ம் பக்கம் பார்க்க)

கொள்ளைக்காரிக்கு ஏற்பட்ட

துயர முடிவு!

பிரபல கொள்ளைக்காரியான ஹசீனாபேகம்-காவலர்களுக்கும் அவளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையின்போது கொல்லப்பட்டாள் எனக் காவலர்களால் சொல்லப்பட்டது.

இன்னும் சில காவலர்கள் கிராமத்து மக்களே அவளை அடித்துக் கொன்று விட்டார்கள் எனக் கூறினார்கள்.

உண்மை என்னவென்றால் —

உத்தரப் பிரதேசத்துக் காவலர்கள் 'உஜார்கிரியா' என்ற கிராமத்திற்குச் சென்று ராம்பரோஸ் யாதவ் என்பவரிடம் 'ஹசீனா எங்கே!'' என்று கேட்டிருக்கிறார்கள். யாதவின் வீட்டில்தான் அவள் தங்கியிருக்கிறாள் என காவலர்களுக்குத் தகவல் வந்தது.

அதற்குள் —

யாதவின் வீட்டில் தங்கியிருந்த ஹசீனா தானாகவே வெளியே வந்து காவலர்களிடம் சரண் அடைந்துவிட்டாள். அப்போது ஒரு காவலர் மகிழ்ச்சியால் குதித்துக் கும்மாளமிட்டிருக்கிறார்! 'ஹசீனா கிடைத்து விட்டாள்!... ஹசீனா கிடைத்து விட்டாள்!!' என்று!

சில காவலர்கள் ஹசீனாவின் தலை முடியை இறுகப்பற்றி 'தரதர' வென்று பக்கத்து வயல் காட்டிற்கு இழுத்துச் சென்றுள்ளார்கள்.

அங்கே —

காவலர்களின் கால்களைப் பற்றிக்கொண்டு மன்றாடியிருக்கிறாள் ஹசீனா.

"நான் ஆறுமாதக் கர்ப்பிணி நான் குழந்தை பெறும்வரையிலாவது என்னை உயிரோடு வாழ அனுமதியுங்கள்... பிறகு என்னை எங்கு வேண்டுமானாலும் இழுத்துச் சென்று என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்..." என்று கெஞ்சியிருக்கிறாள்.

ஆனால்,

அவளைச் சித்திரவதைகள் செய்து துன்புறுத்திய பிறகு சுட்டுக் கொன்று விட்டார்கள் காவலர்கள்!

அதுமட்டுமல்ல...

உயிரற்ற அவள் சடலத்தையும் கேவலப்படுத்தியிருக்கிறார்கள். மேனிமீதிருந்த அனைத்து ஆடைகளையும் களைந்தெறிந்து பிறந்த மேனியாக 'போலீஸ் வேன்' மீது உட்கார வைத்து ஊர்வலம் வந்திருக்கிறார்கள் காவலர்கள்!

உத்தரப் பிரதேசத்து அரசாங்கம் இது குறித்து ஒரு விசாரணை நடத்தப் போகிறது.

ஓர் அறிவிப்பு!

முரசொலியில் நான் எழுதத் தொடங்கி ஐந்து காட்சிகளுடன் நின்று விட்ட

"புனிதராஜ்யம்"

தொடர் நாடகம் 'நம்நாடு' இதழில் ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து இடம்பெறும். மொத்தம் முப்பதுக்கு மேற்பட்ட காட்சிகள் கொண்ட இந்த நாடகத்தை இனி 'நம்நாடு' இதழில் நீங்கள் படித்து மகிழலாம்,

அன்புள்ள,

மு. கருணாநிதி

அ. தி. மு. க. ஆட்சியில் - உயிர் வேட்டையாடும் காவலர்கள் !

திராவிட முன்னேற்றக் கழகமும் பிற எதிர்க் கட்சிகளும் அ. தி. மு. க. ஆட்சியில் காவலர்கள் கட்டுப்பாடற்று மிருகத்தனமாக நடந்து கொள்வதை இடைவிடாது சுட்டிக்காட்டிக் கொண்டே வருகின்றன.

காவலர்களின் காட்டுமிராண்டித் தனமான போக்கை 'நம் நாடு' இதழ் அவ்வப்போது படம் பிடித்துக் காட்டி வருகிறது.

எடுத்துக் காட்டாக —

சிறைச்சாலைகளா? சித்திரவதைக் கூடங்களா? (16—4—78) 'கற்பைச் சூறையாடும் காவல் நிலையங்கள்' (18—6—78) 'காவு கொள்ளும் காவல் நிலையங்கள் (9—7—78) போன்ற தலைப்பிட்டு நம்நாடு இதழ்களில் எழுதப்பட்டவைகள் காவலர்கள் எப்படி மக்களிடம் ஈவு இரக்கமில்லாமல் நடந்து கொள்கின்றனர் என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆனால் —

காவலர்கள் தங்கள் மனப்பான்மையையும் போக்கையும் மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை.

மீண்டும் — தி. மு. க. தொண்டரான சென்னை கொருக்குப் பேட்டையைச் சேர்ந்த முனுசாமி அண்மையில் காவலர்களால் அடித்தே கொல்லப்பட்டிருக்கிறார்

இம்மாதம் பதினொன்றாம் தேதி இரவு 'விசாரணை'க்கு என்று அழைத்துச் செல்லப்பட்ட அவர். மறுநாள் காலை ஸ்டான்லி மருத்துவ விடுதியில் அனுமதிக்கப்பட்டு, அன்றிரவு பன்னிரண்டு மணிக்கெல்லாம் மாண்டு போனார்.

'காக்காய் வலிப்பின் காரணமாக முனுசாமி செத்துப் போனார்' என்று காவலர்கள் வழக்கம்போல் பச்சைப் பொய் சொல்லியிருக்கிறார்கள்.

(காவல் நிலையத்திற்கு விசாரணைக் கென்று அழைத்துச் செல்லப்படுபவர்களெல்லாம் இப்படிக் காக்காய் வலிப்பு வந்து இறந்து போவதன் மர்மம் என்னவோ?)

உண்மை என்னவென்றால் —

முனுசாமி இழுத்துச் செல்லப்பட்ட அன்றிரவே காவல் நிலையத்தில் காவலர்களால் சித்திரவதைகள் செய்யப்பட்டுள்ளார்.

அன்றிரவே அவருடைய மனைவியான சந்திரா பார்க்கச் சென்றபோது கணவரின் முகம். கைகால்கள் அனைத்தும் வீங்கியிருப்பது கண்டு கண்ணீர் விட்டு அழுதிருக்கிறார். அப்போது முனுசாமி தன் மனைவியிடம் சொன்னதாவது

"போலீஸ் காரர்கள் என்னை கண்மூடித்தனமாக அடித்து விட்டார்கள்..."

தன் கணவனைப் பொறுப்பில் அழைத்துச் செல்லச் சந்திரா தாலியையே அடகு வைத்தும் பயனில்லாமல் போய் விட்டது.

சந்திரா காவல் நிலையத்திற்குச் சென்றபோது அறைக்கு வெளியே முனுசாமியின் உடல் ஆடை எதுவுமின்றிக் கிடந்தது வீங்கியும். பல இடங்களில் குருதி உறைந்தும் கோரமாக இருந்தது. அந்த உடல்.

அழுது துடித்த சந்திரா குருதியைத் துடைக்க கிழிந்த துணி கேட்டபோது, அதைக் கூடத்தரமறுத்து விட்டார்கள் காவலர்கள்

குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடந்த முனுசாமியைக் காவலர்கள் மருத்துவ விடுதிக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கேயிருந்து கணவரின் உயிரற்ற உடலைத்தான் சந்திராவால் பெறமுடிந்தது,

காவலர்கள் முனுசாமியைக் கண் மூக்கு தெரியாமல் தாக்கியதை நீதிபதி கண்டித்திருக்கிறார்

அவ்வட்டாரத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சியினரும் (அ. தி. மு. க. உட்பட) காவலர்களின் இந்த மிருகத்தனத்தைக் கண்டித்ததோடு நீதி விசாரணையும் கோரி இருக்கிறார்கள்.

மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டிய காவலர்கள் தொடர்ந்து இவ்வாறு இதயமற்றவர்களாக நடந்து கொண்டால்; அவர்களைத் 'திருத்தி' ஒழுங்காகச் செயல்படுவது எப்படி என்பதை மக்களே அவர்களுக்கு உணர்த்தி விடுவார்கள் என எச்சரிக்கிறோம்.

இதயவானில் உதயசூரியன் எழட்டும்!

ஆடல் கலையின் நுணுக்கங்கள் அனைத்தையும் கற்ற ஆடலரசி மாதவி அவளின் ஊடலில் மயங்கிய கோவலன் அவளோடு கூடலானான் அவளும் அவனும் அறியா நிலையில் கொட்டிக் கிடந்த அவனது செல்வமனைத்தும் — அவளின் பெட்டிக்குப்போய் சேர்ந்தது. பொட்டிமகள் கண்ணகியாள் தன் கால் சிலம்புகளையும் கணவன் கோவலனையும் தவிர அனைத்தையும் இழந்தாள்!

வெற்றுடலும் வேதனை உள்ளமுமாக தன் வீடு வந்து சேர்ந்த தன் கணவனைக் கண்டாள். கட்டி வெல்ல முகம் காட்டி, "ஒன்றும் கெட்டுவிடவில்லை — அத்தான். நம் இரு பெற்றோர்களிடமும் மலையளவு கொட்டிக் குவிக்கப்பட்டு அளக்க முடியா செல்வம்' நிறைந்திருப்பதைச் சொல்லி அவனைத் தேற்ற முயன்றாள் அனைத்தையும் இழந்துவிட்டு வந்துவிட்ட அவனால் அதனை ஏற்றிடமுடியவில்லை. கணவன் கவலை தீர்ந்திட கால் சிலம்பைக் கழட்டிக் கொடுத்து,விற்றுவர அனுப்புகிறாள்

கால் சிலம்பை விற்கச் சென்ற அவளின் கணவனை கள்வர்களிடம் பிடிபட்டு. காணாதொழிக்கப்பட்ட சிலம்பு இவனால் களவாடப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு. நீதி விசாரணை எதுவுமின்றி கொலைக்களத்தில் கொல்லப்பட்டான். குற்றத்திற்குரிய பொருளைப் பற்றியும், குற்றம் சாட்டப்பட்டவனையும் சரிவர விசாரிக்காததால் உண்மை மறைக்கப்பட்டது.

உண்மைக் குற்றத்தின் ஊற்றுக்கால்களாக இருந்தவர்களுக்கு வெற்றியும் கிடைத்தது

மாசாத்து வணிகன் மகன் கோவலன் கொல்லப்பட்டான் கோவலனின் குடும்ப விளக்கு அணைக்கப்பட்டது. குலமகள் கண்ணகியின் குங்குமம் அழிக்கப்பட்டது கொஞ்சும் மஞ்சள் தாலி அறுக்கப்பட்டது. குமுறும் எரிமலையாய் கொந்தளிக்கும் பெருங்கடலாய் கண்ணகி பொங்கி எழுந்தாள். தன் பொட்டையும் பூவையும் இழக்கச் செய்தபுவியாண்ட பாண்டியனிடம் தன் வழக்குரைத்தாள். விளக்கம் பெற்ற மன்னவன் பாண்டியன் நீதி பிறழ்ந்ததைக் கண்டு மகுடத்தைக் கழற்றி எறிந்தான். வெண் கொற்றக் குடையை வெட்டி வீழ்த்தினான். சிம்மாசனத்திலிருந்து கீழே விழுந்து செத்தான்

அன்று ... அவசரத்தில் மன்னனால் ஆராயப்படாமல் அளிக்கப்பட்ட தீர்ப்பால்... தீக்கிரையானது மதுரை மண்டலம்.

இன்று ....மக்களே நீங்கள் தீயவர்களுக்கு இரையாகாமல் மதுரையைக் காப்பாற்றுங்கள்.

கண்ணகி தன் நெற்றியிலே இட்டிருந்த சிவப்புக் குங்குமத்தை—கோவலன் தன் கனிமொழியாள் மாதவியின் நடனமிசைக்கும் கால்களுக்கு வண்ணக் கலவையாகக் குழைத்துப் பூசி அதனழகைக் கண்டு ரசித்தான் அதனால் விளைந்தவைகளை — மதுரை மக்களே மறந்திருக்க மாட்டீர்கள்! அரசியல் வாதிகளிடம் தரவேண்டிய ஆட்சிப் பொறுப்பை ஆட்டக்காரர்களிடம் ஒப்புவித்ததால் நாடு படும் கொடுமைகளை நினைவில் வையுங்கள்!

மதுரை நகராட்சி—மாநகராட்சியாக்கப்பட்டது யார் ஆட்சியில்?

மதுரைக்கு முதன்முதலில் ஒரு மேயரைத் தந்தது எந்தக் கட்சி?

த. பெ. கிருட்டினன்

மதுரைப் பலவகைப்பட்ட கல்லூரிகளையும் பெற்றது யார் ஆட்சியில்? பல்கலைக் கழகம் பெற்றது யார் ஆட்சியில்?

மதுரைக்கு போதுமான காதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைத்தது யார் ஆட்சியில்?

மதுரை புதிய "நீதி மன்றம்" பெற்றது யார் ஆட்சியில்?

மதுரை பாங்கான பாதை வசதிகளைப் பெற்றது யார் ஆட்சியில்?

மதுரை "பாண்டியன் போக்குவரத்துக் கழக'த்தைப் பெற்றது யார் ஆட்சியில்?

கழக அரசில் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலல்லவா?

மதுரை மூதூர் மக்கள் இவைகளை அறியாதவர்களா? மறந்து விட்டவர்களா?

மத்தியில் ஆட்சியிலிருக்கும் ஜனதா ஆட்சி அரசாங்க பூர்வமாக இந்தியை திணிக்கிறார்கள். மாநிலத்தை ஆளும் அண்ணா பெயரிலிருக்கும் கட்சியைச் சேர்ந்தவர்களோ கட்சிக்கு உறுப்பினர் கார்டு வழங்குவதன் மூலமாக கட்சி பூர்வமாக இந்தியைப் பரப்புகிறார்கள்; இவர்களுக்கா உங்கள் ஓட்டு? அலங்காரமாக இருக்க வேண்டிய பெண் அகங்காரியாக மாறி அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து நாட்டையே சர்வநாசகதிக்காளாக்கினார்களே இவர்களுக்கா உங்கள் ஓட்டு?

எந்தத் தேர்தல் காலமானாலும் எவரோடு வேண்டுமானாலும் சில சீட்டுகளுக்காக கூட்டு வைத்துக் கொண்டு உண்மைக் கம்யூனிசத்திற்கு சவக்குழிகளை வெட்டி வருபவர்களுக்கா உங்கள் ஓட்டு?

மதுரை மக்களே! மனதில் இவைகளை நினையுங்கள், உங்கள் இதயத்தில் உதய சூரியன் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய முடிவெடுங்கள்; உங்களுக்குக் கட்டுப்பட்டு உங்களுக்குச் சேவை செய்ய எங்களுக்கு (தி. மு. க. மற்றும் அதன் ஆதரவு வேட்பாளர்களுக்கு) உத்தரவிடுங்கள்.

வீண் புகார் கூறியவர்களும் கூறப்பட்டவர்களும்—பூம்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்மை ஆண்டதற்குப் பதிலாக. நம்மில் அறுபது சதவீதத்தினர் நம்மை அதே மாதிரி ஆளட்டும் என்பதற்காகவா...? நமக்குள்ளேயே ஓர் ஏகாதிபத்தியத்தைத் தோற்றுவித்துக் கொள்வதற்காகவா...?'

என்று இப்போது வினாக்களை வீசுகிறார் இந்த எழுத்தாளர்.

அதாவது — 'நம்மைவிட மக்கள் தொகையில் குறைந்தவர்கள்' என்பவர்கள் பிரிட்டிஷ்காரர்கள். 'நம்மில் அறுபது சதவீதத்தினர்' என்பவர்கள் வடபுலத்தவர்கள்

இதைத்தானே —

தி. மு. கழகம் துவக்க நாட்களிலிருந்தே 'வடவராதிக்கம்' என்று விளித்து வருகிறது

அப்போதெல்லாம் —

தி மு கழகத்தின் விமர்சனங்களை 'நாட்டைத் துண்டாடும் பிரச்சாரம் என்றும்' —'இனவெறியைத் தூண்டும் போக்கு' என்றும் இந்த எழுத்தாளரும், இவர் 'சகாக்களும்' கூறியதை மக்கள் என்ன மறந்தா போய்விட்டார்கள்?

சோற்றுக்கு வக்கில்லாத காலத்தில் 'சோற்றுச் சுமை', 'ஒருபிடி சோறு'— போன்ற சோற்றுப் பிரச்சினைகளை மையமாக வைத்துக் கதை எழுதிய இந்த எழுத்தாளர் — 'சொகுசான' வாழ்க்கை வந்த பிறகு 'சோறு ஒரு பிரச்சினையா? என்று கேட்டுப் பொருளாதாரப் பிரச்னைகளை பின்தள்ளி. பாலுணர்வுப் பிரச்சினைகளுக்கு முதலிடம் கொடுத்து எழுதி வருபவர்

'சொகுசு வாழ்க்கையின் விளைவாகச் சிந்திக்கும் ஆற்றல் இழந்து மாக்ஸிம் கார்க்கியின் உலகப் புகழ்பெற்ற 'தாய்' நாவலின் கதைக் கருவைக் களவாடி, பெயர்களையும். முடிவையும் மட்டும் மாற்றி புது நாவல் ஒன்று எழுதிய இந்த 'இலக்கியத் திருடர்' வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம் 'சாதி வேற்றுமைகள். நீடித்திருக்கவேண்டும்' என்று வலியுறுத்தி 'ஜய ஜய சங்கரா...' போன்ற நச்சு இலக்கியங்களை எழுதித்தள்ளுவார்.

அதே சமயம் —

சலுகைகளுக்காக முதலாளிகளோடு சமரசமாகப் போகும் போலித் தொழிற் சங்கத் தலைவர்களோடு சேர்ந்து 'தொழிலாளர் சாம்ராஜ்யம் இப்பரலோகத்தில் வரக் கடவதாக'... எனப் பொய்யாக 'ஜெபிக்கவும்' செய்வார்.

இவரை 'வாங்க' அன்று இந்திரா 'கோஷ்டி' கொடுத்த விலை என்ன என்று நமக்குத் தெரியாது.

ஆனால் —

ஒன்று மட்டும் நிச்சயம்.

இப்போது இவருடைய 'விலை' என்னவென்று தெரிந்து ஜனதாவினர் 'அவ்விலையை' இவருக்குக் கொடுக்கும் பட்சத்தில் —

இதே ஜனதாவின் வடபுலத்துத் தலைவர்கள் 'நம்மவர்களும், நல்லவர்களும் ஆகிவிடுவார்கள் இந்த எழுத்தாளருக்கு!

புகார் கண்டவர்களை எதிர்க்கிறார்கள். வள்ளுவர் கோட்டம் கண்ட நல்லவர்களை — நாடு, மொழி, இனம் வாழ, நலிவு தீர நாளெல்லாம், பொழுதெல்லாம் உழைத்து வருபவர்களை எதிர்க்கிறார்கள்.

'புதியதோர் உலகம் செய்வோம— அங்கு கெட்ட போரிடும் பேர்களை வேரோடு சாய்ப்போம். கைமாறு கருதா கார்மேகம் டாக்டர் கலைஞரின் தொண்டர்களிடம் மதுரை மாநகராட்சியை ஒப்புவிப்பீர்! கழகத்தையும். கலைஞரின் தலைமையையும் வெற்றி பெறச் செய்திடுவீர்!

புருஷன்

தென்னரசு

(10)

பொன்னையாவுக்கு மனம் கசந்துவிட்டது. "ஏன்தான் என்னால் குருவம்மா கெட்ட பெயர் சம்பாதிக்க வேண்டும்? நான் இங்கே இருப்பதால் குருவம்மாவுக்கு என்ன லாபம்? பாவம்! ஆயிரம் பேர் வேலை பார்க்கும் அணைக்கட்டில் அவதூறாக எழுதிவிட்டார்களே! இது தெரிந்தால் குருவம்மாவின் மனம் என்ன பாடுபடும்?' பொன்னையா இப்படி ஒரு வாரம் நினைத்து நினைத்து வெதும்பினான். ஒரு நாள்...

"குருவம்மா நான் இங்கே வருவதாலே ஒனக்கும், ஒன் மகளுக்கும் சண்டை! ஊரிலே வேற அவதூறு! உனக்கும் கெட்ட பேரு! எதுக்காக நான் கடையிலே இருக்கணும்! ஏதாவது காரணம் இருந்தா சொல்லேன்!' —பொன்னையா குருவம்மாவையே கேட்டுவிட்டான்.

"காரணம் இருக்கு' என் பேரு கெட்டுப்போச்சு! எனக்குக் கெட்டபேரைக் கொடுத்த உலகம் இன்னும் அது பசி அடங்காமெ நாக்கைத் துளாவிகிட்டே இருக்கு. மேலே மேலே அதுக்கு இரையாகாமத் தடுக்கத்தான் நீங்க இங்கேயே இருக்கணும்கிறேன்; புரிஞ்சுதா?" குருவம்மா சூசகமாகச் சொன்னாள்.

குருவம்மாவின் பேச்சு ஒவ்வொன்றும் பொன்னையாவுக்கு விடுகதையாகவே தெரிந்தது.

என்றுமில்லாமல் குருவம்மாவுக்கு ஒரு கடிதம் வந்தது. அணைக்கட்டுக்கு வந்தபின் குருவம்மாவுக்கோ, செண்பகஞ்சேர்வைக்கோ ஒரு கடிதம் கூட வந்ததில்லை. பொன்னையா கல்லாப் பெட்டியிலிருந்தபடி கடிதத்தை வாங்கினான்.

"கடதாசி யாருக்கு வந்திருக்கு?" குருவம்மா உட்பட்டறையிலிருந்தபடி கேட்டாள்.

"ஒனக்குத்தான்" பொன்னையா சொன்னான்

'எனக்கா? யாரு இருக்கா கடதாசி எழுத! மேலோகத்திலிருந்து அப்பாதான் எழுதியிருக்கணும்" குருவம்மா சலிப்பாகச் சொன்னாள்.

"யாராவது சொந்தக்காரங்க மதுரையிலிருந்து எழுதியிருப்பாங்க. படிச்சுப் பாத்தாவுல்ல தெரியும்!' பொன்னையா சொன்னான்.

"நீங்களே படிங்களேன். இதிலே என்ன ரகசியம் இருக்கப்போவுது," குருவம்மா அடுத்துக்கொண்டே சொன்னாள்.

"அது சரியில்லே! இன்னொருத்தர் கடதாசியை நான் படிக்கமாட்டேன். நீயே படிச்சுக்க!" என்று கடிதத்தை குருவம்மாவிடம் கொடுத்தான் பொன்னையா.

குருவம்மா வியாபாரமெல்லாம் முடிந்த பிறகு குளித்துவிட்டுத்தான் அந்தக் கடிதத்தைப் பிரித்தாள். அவளிடம் பரபரப்போ அவசரமோ எதுவுமே இல்லை.

குருவம்மா!

பொன்னையா உன்னை நம்பிக்கை மோசம் செய்துவிட்டான். நீ ஏமாற்றப்பட்டுவிட்டாய். உனது தந்தை செண்பகஞ்சேர்வையை, பொய்ச்சாரத்தின் மூலம் விழவைத்துச் சாகடித்தவன் இந்த பொன்னையாதான் என்பதை மறந்துவிடாதே! இந்தக் கடிதம் கிடைத்த பிறகும் பொன்னையாவுடன் நீ சரசம் வைத்துக்கொண்டால் நீதான் சதி செய்து உன் தகப்பனைக் கொன்றாய் என்பதை அம்பலப்படுத்துவேன்.

இப்படிக்கு

மக்களன்பன்.

இதுதான் கடிதத்தின் சாரம். குருவம்மா கடிதத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் படித்தாள் நிமிடத்திற்கு நிமிடம் புதுவடிவம் புதுவண்ணம் பெறும் மேகத்திட்டைப்போல் அவள் முகம் மாறிக்கொண்டு வந்தது. ஒரு மடக்கு எச்சலை விழுங்கினாள் ஒரு நீண்ட பெருமூச்சை விட்டாள் நல்லவேளை! இந்தக் கடிதத்தை அவரை விட்டுப் படிக்கச் சொன்னேனே நான் ஒரு புத்தி கெட்டவள் என்று அவள் முணங்கிக்கொண்டே கடிதத்தைச் சுருட்டி கல்லாப்பெட்டியின் அடியில் போட்டு ஒளித்துவிட்டாள்.

கடிதத்தில் இப்படி ஒரு தகவல் இருந்ததென்பதைப் அவள் அடுத்தவர்களிடம் காட்டிக்கொள்ளவில்லை. ஆடவர்களில் படித்தவர்கள் கூட கஷ்டங்கள் நஷ்டங்கள் ஏற்பட்ட பிறகுதான் சகிப்புத் தன்மையைப் பெறுகிறார்கள் ஆனால் பெண்களில் படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லோருமே வீட்டுக்குள்ளிருந்துகொண்டே சகிப்புத்தன்மையைப் பெற்றுவிடுகிறார்கள் அதிலும் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பிலே இருக்கும் பெண்களின் சகிப்புத்தன்மையில்தான் எவ்வளவு வீரம் பிறீட்டுக்கொப்பளிக்கிறது என்பதை வர்ணிக்கவே முடியாது

"குருவம்மா."

"என்ன!"

"ரெண்டு நாளா எனக்கு உடம்புக்குச் சரிவரல்லே! குடிசையிலே படுத்துச் சவுரியப்படுத்திக்கிட்டு வாரேன்" என்றான் பொன்னையா.

'ஏன் இங்கேயே இருந்து சரி பண்ணிக்கிட்டா என்னவாம்! இஞ்சிக்கஷாயம் போட்டுக் குடிச்சா சரிப்பட்டுப் போகுமே! இதுக்கு ஏன் குடிசைக்குப் போகணும்" குருவம்மா எவ்வளவோ தடுத்தாள். பொன்னையா பிடிவாதமாக இருந்தான். ஒரு வாரம் கடைப்பக்கமே அவன் தலை காட்டவில்லை. குருவம்மா வேளைக்கு வேளை அவனுக்குச் சாப்பாடு அனுப்பினாள். இரண்டு தடவைகள் குடிசைக்குப்போய் அவனைப் பார்த்து வந்தாள்.

குருவம்மாவுக்கு பொன்னையா கடையில் படுக்காதது கடைக்குப் பாதுகாப்பு இல்லாததுபோல் இருந்தது. அதனால் மனதில் ஒரு பயம் சூழ்ந்திருந்தது இரவு நேரங்களில் அவள் அடிக்கடி விழித்துப் பார்த்துக்கொண்டாள் சக்குவின் இருப்பிடத்தைக் கவனித்துக்கொள்ளவே அவள் அடிக்கடி விழித்துப் பார்த்தாள். ஒரு நாள் இரவு அவள் எதிர்பார்த்தது நடந்துவிட்டது யாரோ அவள் கடை மீது கல் வீசினார்கள். உடனே அவள் கையில் விளக்கை எடுத்துக்கொண்டு கொல்லைப் பக்கமாய்ப்போய் பார்த்தாள் அவளுக்கு ஒரு அரவமும் தென்படவில்லை அதற்குப் பிறகு அவள் தூங்கவே இல்லை. தலைமாட்டில் விளக்கை வைத்துக்கொண்டு விடியவிடிய விழித்துக்கொண்டிருந்தாள். அதுதான் அவளால் செய்ய முடிந்த பாதுகாப்பு.

இந்தத் தகவல் எப்படியோ பொன்னையாவுக்குத் தெரிந்துவிட்டது பொழுது விடிந்ததும் பொன்னையா உடல் வேதனையுடனேயே கடைக்கு வந்தான். குருவம்மா அவனிடம் தேம்பித்தேம்பி அழுதாள். அவளது அழுகுரலில் உரிமை தெரிந்தது. பொன்னையாவின் கண்களிலும் நீர் துளிர்த்துவிட்டது. பாசம் என்பது இரத்தக் கலப்பில் மட்டும் இல்லை என்பதற்குப் பொன்னையா சான்றாக விளங்கினான்.

"இந்த ஊரைவிட்டே போயிடணும்போல இருக்கு" குருவம்மா இதயத்தின் பாதாளத்திலிருந்து பேசுவதுபோல சொன்னாள்.

"ஆபத்து வரத்தான் செய்யும். அதைக்கண்டு ஓடிக்கிட்டே இருந்தா அது தொரத்திக்கிட்டே வரும்! எதிர்த்திட்டா அது உடைந்து சிதறிப் போயிடும் ஒண்ணுக்கும் கவலைப்படாதே!' பொன்னையாவின் ஆறுதல் குருவம்மாவுக்கு ஒரு இலக்கியம் படித்ததைப்போல் இருந்தது. ஆனால் சக்குவுக்கு?

(தொடரும்)

உதயசூரியனை எச்சரிக்கிறது ஒரு 'சிட்டுக் குருவி'!

'விமர்சகன்'

அருட்பிரகாச வள்ளலின்
பேரன் —
அகிம்சாமூர்த்தி காந்தியின்
வாரிசு—இதுவரை
மீனும் கோழியுமே
செரித்து வந்தது—இப்போது
சூரியனையே செரித்து விட்டதாகச்
சொல்கிறது'
நம்புவோமாக.
பூனை பொங்குமாகடலை
நக்கிக் குடித்தது
நம்புவோமாக'
எலி இமயத்தை
ஏப்பம் விட்டது'
நம்புவோமாக .....!
இதன் ஆதரவு
இல்லாது போனால்
ஆளுங் கட்சிகள்
அமலைகளாகுமாம்!
கட்சிகள் மாங்கல்யம்
காப்பதற்கு—இது
மஞ்சள் வியாபாரம் நடத்து
கின்றதாம்!
இந்தச் 'சீப்பான' சீப்பு
ஒளிந்து கொண்டதால்
எத்தனை மணப்பந்தல்களில்
தத்தளிப்பு வழிந்தது?
இந்தப் பொம்மையின்
கண்ணில் செந்தழல் கண்டு
எத்தனை கோபுரங்கள்
குப்புற விழுந்தன?
சூரிய ரேகை
தொட்டுக் காட்டிய
இடத்தில் எல்லாம்
மேய்ந்து கொழுத்த
இது தன் வாயில்
இன்று வழிய விடுவதெல்லாம்
இருள்தான்!
கிளைவிட முடியாத இந்த
மலடு
ஆலமரத்தைக் கேலி செய்கிறது'
அத்தி பழுத்தால் அங்கு;
இச்சி பழுத்தால் இங்கு;
எப்போதும் இந்தக்
கிழத்துக்கு வேண்டியது
பழம்!
ஒட்டுண்ணி உடம்பில்
ஒரு இரத்தமா ஓடும்?
பாஞ்சாலிப் பாத்தியில்
ஒருவகையாகவா
அறுவடை இருக்கும்?
"என்று தணியும் இந்தச்
சுதந்திர தாகம்" என்ற
பாரதி! உன்
பாட்டுக்கு உதட்டில்
மெத்தை விரிக்கும்
'இதற்காக'...இன்றும் நீ
எழுத ஒருவரி......
'என்று தணியும் இந்தச்
சுயநல தாகம்?

நடுத்தெரு நாராயணி

கருணாநிதி



[சென்ற இதழ் தொடர்ச்சி]

திடீரென்று ஒரு நாள், வீட்டுக்கு வந்த அய்யரின் முகத்திலே சோகம் படர்ந்திருப்பதை நாராயணி கண்டாள். காரணம்கேட்டாள். கோயில் வேலையிலிருந்து தர்மகர்த்தா நரசிம்ம நாயுடு தன்னை விலக்கிவிட்டார் என்று கூறினார் அய்யர்.

“ஏன்?” என்று துடித்தாள் நாராயணி.

“ஊரிலேயுள்ளபிராமணர் எல்லாம் மாநாடு கூடினார்களாம். அதிலே, நான் கலப்புத் திருமணம் செய்துகொண்டு உன்னோடு வாழ்வதைக் கண்டித்தார்களாம். சூத்திரச்சியோடு வாழுகிறவன், கோயிலிலே சாமியைத் தொட்டு பூஜை செய்யக்கூடாது—என்றுதர்மகர்த்தாவிடம் வலியுறுத்தினார்களாம் அதனால். தர்மகர்த்தாஎன்னை விலக்கிவிட்டார்’ என்றார் அய்யர்.

இப்படி ஒரு புரட்சிகரமான செய்தியைக் கேள்விப்பட்ட நாராயணி, கிருஷ்ணய்யரைக் கட்டிப்பிடித்தபடி, “பிராமணோத்தமரே! இந்த அனாதைக்காக—உங்கள் ஆச்சார அனுஷ்டானங்களையெல்லாம் எதிர்த்து நின்றதோடு இல்லாமல், சமூகத்தையும் துச்சமாக மதித்து, கோயில் வேலையையும் தியாகம்செய்துவிட்டீர்களே!” என்று கதறினாள்.

“நாராயணி சிறுபிள்ளை மாதிரி அழுதுண்டு இருக்காதே! உனக்காக நான் எவ்வளவோசெய்திருக்கேன்; அது மாதிரி நீ எனக்காக எதுவும் செய்யத் தயாராயிருக்கணும்—அதுதான் எனக்குத் தேவை” என்று சொல்லியபடி அவள் கூந்தலைக் கோதினார் அய்யர்.

“சுவாமி! தங்களுக்காக உடல்—பொருள்—ஆவி மூன்றையும் தத்தம் செய்யத் தயாராயிருக்கிறேன்” என்று அவரது மடியிலே சாய்ந்து விக்கி விக்கி அழுதாள் அந்த விழியழகி.

‘கிருஷ்ணய்யர்—நாராயணி’ ஜோடியைப்பார்க்கும்போது, ‘அய்யோ; இந்த யுவதிக்கு இந்த மனிதன் அவ்வளவு பொருத்தமில்லையே’ என்றுசொல்லத்தான்தோன்றும். ‘கிளி மாதிரி இருக்கிறாள்—இவனோ எலி மாதிரி இருக்கிறான்’ என்று விமர்சித்தவர்களும் உண்டு. பேரழகின் பிறப்பிடம் அவள்—இந்தப் பிராமணனோ இவளெதிரே விண்மீனுக்கு முன் மின்மினியாகத் தெரிகிறான். இப்படிப்பேசாதாரும் இல்லை; ஆனால் நாராயணியின் கண்களோ, இவைகளுக்கெல்லாம் விதிவிலக்கு. அவள்மனக்கண்களுக்கு முன்னே எல்லோருடைய விமர்சனமும் தவிடு பொடியாகிவிட்டது.

குலப்பெருமை இழந்தார். கோயில் குருக்கள் என்ற மதிப்பை இழந்தார்—இவ்வளவும் தனக்காக! தன்னிடம் தந்த வாக்கை நிறைவேற்றுவதற்காக!—என நினைக்கும்போது, நாராயணிக்கு நேரே கிருஷ்ணய்யரின் உருவம்—கிருஷ்ண பகவானின் உருவம் போலவே தோற்றமளித்தது. “கண்ணா, மணிவண்ணா!” என்றுஅவள் பாடாததுதான் பாக்கி. அவ்வளவு பக்தியும் பாசமும் புருஷன் மீது ஏற்பட்டுவிட்டது அவளுக்கு!

குஷ்டரோகக் கணவனைத் தாசியின் வீட்டுக்குத் தூக்கிச் சென்ற நளாயினி—‘தேவலோகத்து மாதர்கள் கற்பரசிகளாய் இல்லாத போது பூலோகத்தில்மட்டும் கற்பரசிகள் இருக்கலாமா? அவர்களைச் சோதிப்போம்’ எனத் தோள் தட்டிப் புறப்பட்டு, நிர்வாணமாக வந்து சோறு பரிமாறச் சொன்ன மும்மூர்த்திகளைக் குழந்தைகளாக மாற்றி நிர்வாணக் கோலத்தோடு அன்னமிட்ட அனுசூயா—இத்தகைய பத்தினிகளையெல்லாம்தோற்கடிக்கும் அளவுக்குப் பதில் சொல் தட்டாத பாவையாக நடந்து கொள்ளவேண்டுமென்று நாராயணி ஆசைப்பட்டாள் அவளது பதிபக்தியைப் பார்த்து ஊரே ஆச்சரியப்பட்டது.

* * *

கோயில் வேலையிலிருந்துநீக்கப்பட்ட இரண்டுநாட்களுக்குப் பிறகு, ஒருநாள் இரவு கிருஷ்ணய்யர் அவசர அவசரமாக வீட்டுக்கு ஓடிவந்தார்! அவரது உடலெங்கும் வியர்வைத் துளிகள். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியபடி “நாராயணி! நாராயணி!” என்று அலறினார்.

அவளோ, “என்ன? என்ன?” என்று கேட்டபடி சின்ன இடை நெளிய ஓடிவந்தாள், பள்ளியறையிலிருந்து!

அய்யர், பிரக்ஞையற்ற நிலையில் நின்று கொண்டு பிதற்றினார்.

“நாராயணி! நோக்காக நான் எவ்வளவு தியாகம் செய்திருக்கிறேன்?”

“ஆமாம்; அதற்கென்ன இப்போது?”

“ஞாபகமிருக்கா? நேக்காக நீ உடல்-பொருள்-ஆவி மூன்றையும் தியாகம் செய்வேனு சொன்னியே!”

“ஆமாம்; சொன்னேன்—இப்போதும் சொல்கிறேன்!”

“நாராயணி! ஆபத்துவந்துவிட்டதடி! நீ, ஆவியையும் பொருளையும் தியாகம் செய்யத் தேவையில்லை உடலை மட்டும் தியாகம் செய். போதும்!”

“என்ன சொல்கிறீர்கள் சுவாமி?”

“ஆமாண்டி கண்ணே! என் உயிரைக் காப்பாற்ற வேணும்னா. நீ உன் உடலைத் தியாகம் செய்யத்தான் வேணும்!”

“புரியவில்லையே...”

“தர்மகர்த்தா நரசிம்ம நாயுடு இருக்காரே; அவருக்கு உன் உடலை...”

அய்யர் வாய் மூடவில்லை, அதற்குள் நாராயணி மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தாள்.

நாராயணிக்கு பிரக்ஞை வந்தபோது தான் கட்டிலிலே படுக்க வைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தாள். தன்னுடைய நெற்றியை மெதுவாகத் தடவிக் கொடுத்துக்கொண்டிருந்த கைகளைத் தனது கைகளால் வெறுப்போடு நகர்த்தினாள். அப்படி அவள் நகர்த்தும்போது கண்களையும் அகல விரித்துப் பார்த்தாள். அவளருகே சாய்ந்தபடி அமர்ந்திருந்தது, கிருஷ்ணய்யர் அல்ல!

கிருஷ்ணய்யரைவிட அழகான ஒரு மனிதர். நல்ல தேகக்கட்டு படைத்த வாலிபர். முறுக்கிவிடப்பட்ட இள மீசைகள் அவரது முகத்தின் கம்பீரத்தை அதிகப்படுத்திக் காட்டிக் கொண்டிருந்தன. பரந்த மார்பகமும், அதை மூடியிருக்கும் பட்டுச்சொக்காயும். பார்ப்பவரைக்கவரத்தக்க விதத்திலே அமைந்திருந்தன. நெற்றியிலே லேசான நாமம்—சிவப்புக் கோடு மட்டும்! அவர், நாராயணியை உற்றுப்பார்த்தபடி அமர்ந்திருந்தார். அவரைக் கண்ட நாராயணிக்குப் பேச வாயெழவில்லை எழுந்தோடுவதற்கும் சக்தியற்றுப் போனாள். ஏதோ சொல்ல நினைத்தாள், வாய் குழறிற்று

“நீங்கள்...? நீங்கள்...?”—என்று மட்டுமே அவளால் கேட்க முடிந்தது அப்படிக் கேட்டுக் கொண்டேயிருந்தாள்.

“நான்தான் தர்மகர்த்தா நரசிம்ம நாயுடு” என்று கூறியவாறு, நாயுடு அவளை இறுகத் தழுவிக்கொண்டார்.

நாராயணி, அவரிடமிருந்து விலகிக்கொண்டு “அய்யோ, தெய்வமே! இது உனக்கு அடுக்குமா?” என்று கதறினாள் தெய்வம் அப்போது என்ன வேலையாக எங்கே போயிருந்ததோ; தன் பிரதிநிதியாக ‘காமனை’ அனுப்பியிருந்தது போலும் அவனும் நரசிம்ம நாயுடு பக்கம் சேர்த்து கொண்டு தூபம் போட ஆரம்பித்தான்.

“கண்ணே நாராயணி! என் பேச்சைக் கேளடி, பெண் தெய்வமே” என்று நாயுடு, அவள் அழகின் முன்னே மண்டியிட்டார்.

“என் கணவர்தான் இது போன்ற இழிதொழிலுக்கு இசைந்தார் என்றால்,கோயில் தர்மகர்த்தாவாகிய தாங்களும் பாவச் செயல் புரியலாமா?” எனக் கண்ணீர் வடித்தபடி தர்மகர்த்தாவின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு துடித்தாள் நாராயணி.

“பாவம், புண்ணியம் எல்லாம் எனக்குத் தெரியாது நாராயணி—அதைப்பற்றியெல்லாம் உன்னிடம் உபதேசம்கேட்கத்தேவையில்லை. வாரம் ஒருமுறை எது தவறினாலும், கோயிலிலே வாரியாரின் உபதேசம்தவறுவதில்லை. அதை வரி பிசகாமல் என் காதால் கேட்டுக்கொண்டுதான் வருகிறேன்’ என சிரித்தபடி அவளைவாரியணைத்தார் நாயுடு!

அவரது வாலிபம் துள்ளும் வலிமை மிக்க கரங்களிலே நாராயணியின் மெல்லிய இடை சிக்குண்டு நெளிந்தது வளைந்தது; துவண்டது!

அந்தப் பலமான அணைப்பிலே சிக்கியபடி நாராயணி, அவரைப் பார்த்துப் பேசினாள் இருவருடைய முகங்களும் ஒன்றுக்கொன்று வெகு அருகாமையிலே தானிருந்தன அவள் ஆத்திரத்தோடு கேட்டாள்;

“நீங்கள் செவிமடுக்கும் உபன்யாசங்களிலே இப்படித்தான் இன்னொருத்தன்மனைவியிடம் இன்பப்பிச்சை கேட்கச் சொல்லுகிறார்களோ?” என்று!

“ஆமாம்கண்ணே-ஆமாம்! சாம்பல் பூசிய சிவனை, தன் மனைவியோடு சரச சல்லாபத்திற்கு அனுப்பிய இயற்பகை நாயனார் புராண காலட்சேபம்—இன்று காலையிலேதான் ஆயிரக்கால் மண்டபத்திலே அதிவிமரிசையாக நடைபெற்றது’ எனக் கூறியபடி அவள் முகத்தோடு தன் முகத்தைப் பொருத்த முனைந்தார். அவரிடமிருந்து எப்படியும் விடுபட வேண்டும் என்ற ஆவேச உணர்ச்சியோடு அவரை ஒரு தள்ளாகக் கீழே தள்ளிவிட்டு சுவரின் பக்கம் போய் ஒதுங்கி நின்று விம்மியழத் தொடங்கினாள் அவள்.

நாயுடுவுக்கு கோபம் பிறந்தது. “நாராயணி இதனால் எனக்கொன்றும்நஷ்டமில்லை நாளைக்கே உன் புருஷன் கையிலே காப்புப் போட்டு வீதியிலே போவான். அதைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையிருந்தால் உன் இஷ்டப்படியே நட!” என்று கூறிவிட்டுநாயுடு அறையைவிட்டு வெளியேறினார்.

நாராயணி சிலைபோல் நின்று கொண்டிருந்தாள். கிருஷ்ணய்யர் அவளைநோக்கி வேகமாக ஓடிவந்தார்—“அடிபாவி! என்னை மோசம் செய்துவிட்டாயே!” என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு அலறினார். நாராயணிக்கு அவரோடு பேச ஒன்றுமில்லை பேசாமல் கட்டிலில் உட்கார்ந்கொண்டு கிருஷ்ணய்யரை எரித்துவிடுவதுபோல் பார்த்தாள்.

“ஏண்டி இப்படி என்னைப் பாக்கிறே? என்னை ஜெயிலில் போடறதுக்கு நீயும் தீர்மானிச்சுட்டியா?”

கிருஷ்ணய்யர் பரிதாபமாகக் கேட்டார். நாராயணி பேசாமல் இருக்கவே மீண்டும் அவரே பேச்சைத் தொடர்ந்தார்;

“அடி என் கண்ணு! என் நிலைமை நோக்குத் தெரியாதுடி! கைவிலங்கு காத்துண்டு இருக்குடி! கோயில்லே அம்மன் தாலியையும்—மூலவிக்கிரகத்துத் தங்கக் கவசத்தையும் நான் திருடிவிட்டேன்னு பேருகட்டி விட்டானுங்கடி! வித்த இடத்திலே, அந்த வாங்கின பயலுகளும் என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டானுங்கடி! இப்ப என்னடி பண்றது! தர்மகர்த்தா தயவு இல்லேன்னா தலைதப்பாதடி தப்பாது.”

நாராயணி அழுதுகொண்டிருந்தாளே தவிர பேசவில்லை அவளது நெஞ்சிலே எத்தனையோ குமுறல்கள் கொழுந்து விட்டெரியும் தீ ஜுவாலையைப்போல் இருந்தன அவள் கண்கள்.

“எனக்காக இந்தத் தியாகம் பண்ணுடி! இது ஒண்ணும் பெரிய குற்றமில்லேடி, தர்மகர்த்தா நரசிம்மலு நாயுடு நல்ல மனுஷன்—எனக்குச் சகோதரன் மாதிரி!

அவன் மனசுவைச்சாதான் என்னைக்காப்பாத்த முடியும், ஒரு குலஸ்திரீ அஞ்சு பேர்வரை ஆடவாளிடம் தொடர்பு வச்சிக்கலாம்னு நம்ப பாரதமே சொல்லுதடி! கேளுடி என் பிராண நாயகி—பத்து வருஷம். பதினைந்து வருஷம்னு என்னை ஜெயில்லே போட்டுட்டா—அப்ப கவலைப்பட்டுகிட்டு தானே இருப்பே—அந்தக் கவலையில்லாமே ரெண்டு பேரும் சந்தோஷமாயிருக்க, சம்மதம் கொடடி!”

அய்யர் கெஞ்சினார் நாராயணியின் மௌனம் நீடித்தது. அய்யருக்குச் சிறிது நம்பிக்கை பிறந்தது. நாராயணி தனக்காகத் தன்னைத் தியாகம் செய்யத் தீர்மானித்துவிட்டதாகக் கருதினார்.

“அவர் எங்கும் போய்விடவில்லை. அடுத்த அறையிலேதான் இருக்கிறார்—இப்போதே வரச் சொல்றேண்டி—மறுபடியும் அவரை விரட்டாதே! என்று கூறியபடி கிருஷ்ணய்யர் வெளியே ஓடினார்.

நாராயணி, கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ஏதோ ஒருமுடிவோடுஎழுந்து நின்று நாயுடுவின் வரவை எதிர்நோக்கினாள் நாயுடுவும் ஆவலோடு உள்ளே நுழைந்தார் நாராயணி அவர் முகத்தை ஏக்கத்தோடுபார்த்தாள்.

“வந்துவிட்டேன் நாராயணி நான் எங்கும் போகவில்லை, பக்கத்து அறையிலேதான் இருந்தேன். நீ என் உறுதியைச் சோதிப்பதற்காகவே பிடிவாதம் செய்தாய் என்பதைப் புரிந்துகொண்டேன்” என்று பல்லை இளித்தபடி அவளது பக்கம் வந்து நின்றார் நாயுடு. அவர் பேசி முடிப்பதற்குள்ளாக நாராயணி அவரது கைகளை பிடித்துக்கொண்டு, “என்னை எப்போதும் வைத்துக் காப்பாற்றுவீர்களா?” என்றுதிடீரெனக்கேட்டுவிட்டுத்தேம்பி அழுதாள்.

இது போன்ற வார்த்தை அவளிடமிருந்துவெளியாகும் என எதிர்பார்க்காத நாயுடுவும் திடுக்கிட்டார்.

“உண்மையாகவே கேட்கிறேன்—என்னை உங்களிடம் ஒப்படைத்தவனை இன்று முதல் புருஷன் என்கிற நிலையிலே வைத்து நான்பூஜிக்கப் போவதில்லை. இனி நீங்கள் தான் எனக்குக் கதி! நீங்கள் தான் எனக்குப் பதி நான் உங்களுக்கு மனைவியாக இருக்கும் பாக்கியம் பெற்றவள் அல்லதான்! ஆனாலும் உங்கள் அடிமையாக இருக்கிறேன் மீண்டும் என்னை அந்தப் பாவியின் கையிலே ஒப்புவிக்காமல் இருப்பதாக எனக்கு வாக்குக் கொடுங்கள்.”

நாராரணியின் கோரிக்கை எதுவாக இருந்தாலும் நிறைவேற்றுவேன் என்று சொல்லித் தீரவேண்டிய நேரம் அது! அதனால் நாயுடு தலையசைத்தார்.

“துண்டுக் கரும்பு கேட்டவனிடம்—தோட்டத்தையே எடுத்துக்கொள் என்பது போல் இருக்கிறது நாராயணி உன் பேச்சு!” என்றார்.பிறகு வென்றார்.

கிருஷ்ணய்யர் மறுபடியும் கோயில் குருக்களானார். திருட்டுப்போன நகைகளைப் பற்றி சரியானபுலன்கிடைக்கவில்லையென்று போலீசாரும் அறிவித்துவிட்டனர். காலை முதல் அர்த்த ஜாமப் பூஜை வரையிலே கிருஸ்ணய்யருக்கு கோயிலிலே வேலை தான். இரவு இரண்டு மணி வரையில் தினந்தோறும் பக்தர்களுக்கும் பிரசங்கம் செய்வார். அதற்கு மேல் கோயில் மண்டபத்திலேயே படுக்கை; உறக்கம் எல்லாம்!

நாயுடுவுக்கும், நாராயணிக்கும் ஒரு குழந்தை பிறந்தது. பிறந்த நாலாம் நாள் நல்லவேளையாக அது இறந்துவிட்டது. அது உயிரோடு இருந்திருந்தால் ஒரு வேளை நாயுடுவின் தொடர்பு அறுந்திருக்கலாம். நாராயணி, கிருஷ்ணய்யர் என்று தனக்கு ஒரு நாயகன் இருந்ததையே மறந்துவிட்டாள்.

தர்மகர்த்தா ஒரு நாள் ஊரில் இல்லை என்ற செய்தி கிருஷ்ணய்யர் காதுக்கு எட்டியது நகரசபைத் தலைவர் தேர்தலுக்காக ஏழெட்டு உறுப்பினர்களை விலைக்கு வாங்கி எங்கேயோ ஒரு காடாரம்பத்திற்கு ஓட்டிக்கொண்டு போய்விட்டார் என்றும். திரும்ப இரண்டு நாட்கள் ஆகும் என்றும் அய்யர் கேள்விப்பட்டார்.

நாராயணியைப் பற்றிய பழைய நினைவுகள் அய்யரைக் குடைந்தன. நாராயணியை நாயுடுவிடம் அர்ப்பணிக்காமல் ஜெயிலுக்கே போயிருந்தாலும் பரவாயில்லையே; ஜெயில் என்ன இந்தக் கோயில் மண்டபத்தை விடவா மோசமாக இருக்கப் போகிறது—என்று தனக்குத் தானே வருந்திக் கொண்டிருந்த அய்யருக்கு எப்படியும் நாராயணியை ஒருமுறை சந்திததுவிட வேண்டுமென்ற ஆசை பிறந்தது. அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ளத் தக்க சமயம் கிடைத்ததாக எண்ணிப் புறப்பாட்டார்.

நாராயணி வீட்டுக் கதவைத் தட்டினார் நாயுடுதான் வந்துவிட்டார் போலும் என்ற நினைவில் அவளும் கதவைத திறந்தாள். அய்யர் எதிரே நின்றார். நாராயணி அவரை உடனே வெளியேறுமாறு கட்டளையிட்டுத் தன் அறைப்பக்கம் போனாள். அய்யரும் அவளைத்தொடர்ந்தார். “மரியாதையாகப் போய்விடுவது நல்லது! ’என எச்சரிததாள் அவள். அய்யர் கெஞ்சினார்.

“அன்றொரு நாள் கோயிலிலே முதன் முதல் சந்தித்துக்கொஞ்சினீரே; அந்த நாராயணி அல்ல இவள்! இவள் நாயுடு மனைவி—தர்மகர்த்தா நரசிம்மரின் உடமை!’ எனக் கர்ச்சித்தாள் அவள்.

“என்ன இருந்தாலும் நீ என் மனைவியல்லவா?”—அய்யரின் பசிக்கு எப்படியும் அவளை இரையாக்கித் தீர வேண்டும்.

அவளோ, எரிமலையாக இருந்தாள் அய்யரைச் சுட்டெரித்துவிடும் நெருப்புக் குண்டங்களாகக் காட்சியளித்தன அவள் விழிகள்.

“முடியுமா முடியாதா நாராயணி?”—முரட்டுத்தனமாக அவளது கரங்களை இழுத்த அய்யரின் கன்னத்திலே நாராயணி ‘பளார்’ என அறைந்தாள்.

“அடி விபச்சாரி உனக்கு இவ்வளவு கொழுப்பா?” எனக் குதித்தார் அய்யர்.

“நான் விபச்சாரிதான்! அய்யரே; விபச்சாரிதான்! உம்மைப்போன்ற மனைவியை விற்கும் அரிச்சந்திரர்களின் மத்தியிலே என்னைப்போன்றவர்கள் எப்படிக் கற்போடு வாழமுடியும்?’—நாராயணி பெருங்கூச்சலிட்டுப்பேசினாள்

“பத்து வருட சிறைவாசம்! அதைத் தாங்க உம்மால் முடியாவில்லை! பத்தினியின் உடலை விற்றீர்! பகற்கொள்ளைக்காரனைபோல, பகவானின் சொத்தைத் திருடி, மனைவியைப் பரத்தையாக்கி—மானத்தை இழந்து—உயிரைக் காப்பாற்றிக்கொண்ட உமக்கு. என்னை மனைவிஎன்று அழைக்கவும் உரிமை வாழ்கிறதோ? தூ! வெட்கங்கெட்டமனிதரே! போமய்யா போம் உமது பித்தலாட்டங்களைப் பிரசங்கம் என்று போற்ற பக்தர்கள் இருக்கிறார்கள்; அவர்களிடம் போம்!”

விரல் நீட்டி தெரு வழியைக் காட்டி நின்றாள் நாராயணி.

அய்யரோ, அவளை விடுவதாயில்லை. எப்படியும் அன்றைய தாகத்தைத் தணித்துச் செல்ல விரும்பினார். எதிரே நிற்பது ஏதோ ஒரு மண்பதுமை என்ற எண்ணம்தான் இருந்தது நாராயணிக்கு!

அய்யர், அவளைத் தழுவிக்கொண்டார். ‘தப்ப முடியாது நீ!’ என்று கரகரத்த குரலிலே கத்தினார். நாராயணிக்கும், அவருக்கும்சிறிது நேரம் கடும் போராட்டமே நடைபெற்றது.

எப்படியும் விடுபட முடியாது எனக்கண்ட நாராயணிக்குத் திடீரென ஒரு யோசனை—நாயுடு மேஜையிலே ஒளித்துவைத்திருக்கும் கைத்துப்பாக்கி! ஓடிப்போய் மேஜையைத் திறந்தாள், துப்பாக்கியை எடுத்தாள்.

“டுமீல் டுமீல்!” எனஒலி கிளம்பிற்று.

“அய்யோ! அய்யோ!” என்ற அலறல்.

நாராயணி திகைத்தாள். அது அய்யரின் குரல் அல்ல! நாயுடுவின் குரல்தான்! ஓடிப்போய்ப் பார்த்தாள். நாயுடு அறை வாயிற்படியிலே சுருண்டு கிடந்தார். அய்யரோ எந்த ஆபத்துமின்றி, கட்டிலுக்கடியிலே ஒளிந்திருந்தார். நாயுடுவைக் கொன்றுவிட்ட நாராயணி அவர் மீது விழுந்து புலம்பினாள்.

நகரசபைத் தலைவர் தேர்தலைப் பற்றிய கவலையைக் கூட ஒதுக்கி வைத்துவிட்டு அதற்குள் ஒருமுறை நாராயணியைப் பார்க்க ஓடிவந்த நரசிம்ம நாயுடு எதிர்பாராத வகையிலே நாராயணியாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆனால்—

போலீசார் அப்படி வழக்குப் பதிவு செய்யவில்லை.

அவர்கள் அய்யரை வீரராக்கிவிட்டார்கள். கட்டிலுக்கடியிலே ஒளிந்து மயங்கிக் கிடந்த அய்யர்தான் நரசிம்ம நாயுடுவைச் சுட்டுக் கொன்று வஞ்சம் தீர்த்துக் கொண்டார் என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

ஆயுள் தண்டனை!

அந்த மட்டில் ஆண்டவன் நாராயணியின் துப்பாக்கி முனையிலிருந்தும். நீதிமன்றத்தின் தூக்குத் தண்டனையிலிருந்தும் தன்னைவிடுவித்தானே என்ற மகிழ்ச்சி அய்யருக்கு! நாராயணியோ அனாதையானாள்.

அய்யரோடுகுடும்பம் நடத்திய வரையில் “நாராயணி அம்மாமி!” என்று ஊரார் அவளை அழைத்தனர்.

நரசிம்ம நாயுடு பிரவேசித்த பிறகு. “மிஸஸ் நாயுடு’ என்று ஊர் கூறியது.

இப்போது அவள் ‘நடுத் நாராயணி ஆகிவிட்டாள். முன்பெல்லாம் நடுத்தெரு நாராயணி என்றால் அவள் இருக்கும் தெருவைக் குறிக்கும்—இப்போதோ? நடுத்தெருவுக்கு அர்த்தமே வேறு!

* * *

என்னதான் நாராயணியின் வாழ்க்கை கெட்டுவிட்டாலுங்கூட, அவளது மனதிலே நரசிம்ம நாயுடுவுக்கு நல்லதோர் இடமுண்டு. அற்பபுத்திக்கார அய்யரைக் கொல்லப் போய் ஆசை நாயகனைப்பல்லவா கொன்றுவிட்டாள், அவசரத்திலும்—ஆவேசத்திலும்!

பாமாவினால் கொல்லப்பட்டதாகச் சித்தரிக்கப்பட்ட நரகாசுரவதைப்படல ஊர்வலரதத்தைப் பார்க்கும்போது அவளுக்கு, தான் செய்த கொலைதான் ஞாபகத்திற்கு வருகிறது. அதனால்தான் தீபாவளி தினத்திலே அவள் அப்படிச் சோகமாக அமர்ந்திருந்தாள் போலும்!

புயல் - வெள்ளத் துயர்துடைப்பு நிதி!

14-5-78 ஆம் நாள் இதழ்த் தொடர்ச்சி ரு 66,135-05

செங்கை பாண்டூர் டி. ஆனந்தன். வேலூர் ஏ. கண்ணன் கிருஷ்ணகிரி எஸ் எஸ். கன்னையன். எம் டி. இராசேந்திரன், திருமங்கலம் ஆர் சீனிவாசன், விருத்தாசலம் ஏ ராசாங்கம். சென்னை-2 வி. டேவிட் குருபாதம், சென்னை—81 ஏ பஞ்சநாதன். கே. சுப்பையா. புரசைவாக்கம் எம் ஐ சீனிவாசன் சென்னை—1 எம் லோகநாதன். சென்னை - 21 எம். கந்தசாமி. எல். இராமதாஸ், சென்னை-56 எஸ் எஸ். ஜரார், சென்னை-95 டி. வி. யோகானந்தம், சென்னை-78 வி முருகானந்தம். சென்னை-95 பி. டி சி. இராசமாணிக்கம், சென்னை-32 சத்தியமேரி தங்கவேல், வ ஆ மேல்புலம் பி. சிராமுலு ஈச்சங்கால் மு. தர்மலிங்கம், மதுரை வி கந்தப்பன். நுங்கம்பாக்கம் என் சோமநாதன் நீலகிரி வி நல்லுசாமி. தெ. ஆ. மேலை வீதி கே என். முத்தையன் தஞ்சை எஸ். திருமலை. சென்னை உடன் பிறப்பு தஞ்சை எஸ் இராசு, கல்லக்குடி ஏ. ஜனதாராணி வேட்டைக்கான் இருப்பு வி பண்டரிநாதன். பெங்களூர் இ எஸ், மணி, ஆகிய 31 பேர் ரு 10/- விதம் 310—00

சென்னை-1 கே சி கோவிந்தசாமி பெரம்பலூர் என் செல்வராஜ் ஆகிய 2 பேர் ரு 9/- வீதம் 18—00

சென்னை-91 கே. கோவிந்தன் கே கிருஷ்ணசாமி. ஜி, சண்முகம், ஆகிய 3 பேர் ரு 8 - வீதம் 28—00

சென்னை-33 டி. விஜயலட்சுமி, தெ. ஆ நோவிபனூர் கே வி ருக்மணி, அவரக் குறிச்சி எம் சிவசுப்பிரமணியன். பெங்களூர் சி. லோகநாதன், சென்னை-7 பி கண்ணன். கும்பகோணம் டி. இராசேந்திரன், கள்ளக்குடி சி. அன்பரசு ஆகிய 7 பேர் ரு 7- விதம் 49—00

சென்னை-20 சி. வி. திருநாவுக்கரசு (6·70), சேலம் கிருட்டிணன் (6 66). மதுரை அனுப்பானடி சுப. ராமசாமி, கம்பம் பி. சாகுல் அமீது. சென்னை-4 எஸ் வியோரஜ்: சென்னை-12 எஸ் செல்வராசன் ஆகிய 6 பேர் ரு 6 - வீதம் 37—36

திருச்சி தமிழ்நாடு மின்சார வாரியம் செல்லதுரை, எம்- சண்முகம் ஆகிய 2 பேர் ரு 2- வீதம் 4—00

பழனியப்பன், எம்.ரங்கராசன் ஆகிய 2 பேர்- வீதம் ரு 1 2—00

சென்னை-1 சின்ன கன்னியப்பன், கன்னமங்கலம் திரவியம், சுசீந்திரம் பகவதியம்மாள், சம்மந்தபுரம் ஏ வி. செல்லையா. திருப்பத்தூர் ஜி சசிகுமார், கோவை-31 சி. வெள்ளிங்கிரி குள்ளம எஸ் முனுசாமி. கடையம் எஸ் கே. சிவனையா, மதுரை பி. சதாசிவம், சூளை வி. தனசேகரன். திருநெல்வேலி பி எம். கனி. மதுரை இஸ்மாயில்கான் ஈரோடு சி. வேலுச்சாமி குன்னத்தூர் கே. சோமு. காவேரிப்பட்டினம் தா பட்டாபி மதுரை மாலைப சவுண்டன்பட்டி தி. சுப்பிரமணி திருவொற்றியூர் சி. பாலசுப்பு. மதுக்கூர் என் கே ஆர். நாராயணன், சென்னை-28 வா சுந்தரமூர்த்தி; சென்னை-5 கே. சீனிவாசன் ஆகிய 20 பேர் ரு 6- வீதம் 120—00

மதுரை கணபதிமாறன் (5.75). கும்பகோணம் டி வி, சீனுவாசன் (5.67) செங்கறபட்டு ஆர் சிகாமணி (5 55) திருக்குவளை காசிநாதன். (5.55) தேர்வாய் தனசேகரன் (5.55) அயன்புரம சந்தர் (5 55) சென்னை-12 இரா பெரியசாமி (5.55) திருக்குவளை பி ஏ இராமமூர்த்தி (5.55), பசுமலை விஜயகுமார் (5 55) விளாங்குடி சதாசிவம் (5.55) அம்பத்தூர் அகமத் பாட்சா (5.55) எச். காதர் (5 50) மேட்டுப்பாளையம் இப்ராகிம் (5 25) தேனும்பேட்டை இராமலிங்கம் (5.11), மதுரை பச்சமரப்பட்டை பழனி (5 10) தேனும்பேட்டை சொக்கம்மாள் (5.05) ஆகிய 16 பேர் ரு 5 - வீதம் 87—34

சென்னை-11 த இராசன் (5 05) எழும்பூர் எம். ஆறுமுகம் (5 05), மதுரை எம். எஸ் குமாரவேல் (5.05) சைதாப்பேட்டை பழனி (5.05) திருவல்லிக்கேணி குமாரசாமி (5 05). புதுக்கோட்டை புழுதிப்பட்டி ஜெகநாதன் (5 01) திருச்சி-8 அகிலாண்டம் (5 01) உறையூர் வாசுகி (5.01) காலிங்கராயன் புதூர் நாராயணசாமி. இரங்நசாமி கே. பி. இராமசாமி, நாகை இரா பாலசுப்ரமணியம், பாலு செட்டி சத்திரம் முனிரத்தினம். சாமபட்டி செ அத்தியண்ணன் ஆகிய 14 பேர் ரு 5- வீதம் 70—28

திருச்சி நித்தியானந்தபுரம மு தங்கவேலு பீம நகர் தீனதயாளன். கன்டோன்மெண்ட் கே. கணேசன், கே. ரமேஷ் டெல்டவுன்சிப் என். வேலுசாமி டி. ஆல்பர்ட், ம அ மருந்துவமனை பி சத்தியப்பன். காந்தி நகர் எல். இராமசாமி, பாரதமிகுமின் தொழிலகம் தேவராசன். அ. இராமன் டி கண்ணன் தி அம்பலராசு டி இராசரத்தினம், ஆதித்தன், மு. செல்வம், மு தமிழரசி, மு. முத்து, என். பெருமாள், குமணன் தனபால். சங்கிலிமுத்து, கைலாசபுரம் க ப சண்முகம் எம். ஆர் வாஷிங்டன் சா. முருகவேல், வி. முனியசுந்தரம் சி பாலுசாமி, வி சக்கரவர்த்தி. நவலேந்திரன், அ. காசி, ம. லீலா சிதம்பரம். சி செம்பண்ணன் பொதட்டூர் பேட்டை ஏ ஜி இராசேந்திரன். பெங்களூர் ஜி குருசு. சென்னை 5 டி. என். இரகுமான் பீ, நெய்வேலி-2 இ. தர்மலிங்கம் கல்பாக்கம் பழனிசாமி ஆகிய 36 பேர் ரு 5- வீதம் 180—00

சென்னை-54 மகமூநா பீபி, திருப்பாச்சூர் கோமேசுவரன், பட்டாபிராம் டி என் கிருட்டிணன் பி. என். கே. சாமி ப அரங்கசாமி சலிமாகான், வி மி கல்யாண சுந்தரம். அம்பத்தூர் ஏ. பி. தனம். சென்னை-24 டி சின்னசாமி. எம் கதிர்வேலு, வேலூர்-1 பி கே; சம்பந்தன்; வேலூர்-4 கே. என். கிருஷ்ணன் சுப்பிரமணி சண்ணுபுரம் கே பரமன், ஆகிய 14 பேர் ரு 5- வீதம் 70 00

கோவை என். சேகர் மதுரை பா. சங்கரன்; பம்பாய் பிரேம்நகர் எஸ் கே. மதார், எஸ் கோவிந்தன், ஏ இராசேந்திரன், டி சவேரியா பிச்சை மாதுங்கா எம். ஒப் முபாரக், அறந்தாங்கி எம். சுப்பிரமணியன். வெண்ணந்தூர் ஏ. சண்முகம், பொள்ளாச்சி ஏ பி. பாலசுப்ரமணியன் ஆகிய 10 பேர் ரு 5- வீதம் 50—00

பொள்ளாச்சி கே. வி சீனிவாசன். முகவை சுந்தரபுரம் கே சி. மாறன். வேப்பங்குளம வே சாளிமுத்து கோவை சண்முகம், மதுரை பழனியப்பன், முகவை தெக்கூர் இராம. சுப்பிரமணியன், வி. ஜானகி எஸ். எஸ் சிங்காரம், குருசாமி. கோவை ஆர். நடராசன். மதுரை கு. தமிழ்மணி சமயநல்லூர் எம். பாலுராஜ்; பெங்களூர் ஆர் எஸ். இராமன், கௌதமபுரம் பி. செல்லையா. யஷ்வன்புரம் ஜி. இராமலிங்கம். சிவ செட்டி தோட்டம சே. இராமன், ஜே சக்கரவர்த்தி அருணைநயம், ஜவாலி பி கருணாகரன். நெய்வேலி ஆர். முத்துகிருட்டிணன். ஜி முஸ்தாக் உசேன், கோ. காசிநாதன், பெண்ணாடம் சிவ. தியாகராசன். கடலூர் சம்பந்தம் சந்திரசேகரன். பெருமாள். அசோத்தமன் ஆகிய 27 பேர் ரு 5- வீதம் 135—00

கடலூர் புருஷோத்தமன். என். கிருஷ்ணமூர்த்தி சீ சந்திரன் பி. ரெங்கநாதன், தி. கோவிந்தசாமி என். கிருஷ்ணமூர்த்தி, என், இராமச்சந்திரன். சி ராஜாராம், சென்னை கொரட்டூர் டி ரவி. நெய்வேலி ப. க பழனியப்பன், கோலியனூர் நா. அன்பரசு எம் வி கண்ணன், ஏ வி சரவணன் ஆகிய 13 பேர் ரு 5- வீதம். 65—00

சென்னை, இராமலிங்கபுரம் சு, லக்குமிதி புளியந்தோப்பு எஸ் லத்தீப், எம். எம், ஒல்துஷாகுல் அமீது காரைக்கால் பாப்பாத்தியம்மாள். அடன்புரம் டி. சுந்தரம், திருச்சி பில்டவுன் ஷாப் செல்வன் பீட்டர், திருவரமபூர் எம். சிதம்பரம். தென்கட்டார் எஸ். இராஜி காஞ்சிபுரம் பாலு சமுத்திரம் அந்தோனி நாஸ் பி பூங்காவனம் திருவள்ளூர் வேதமாணிக்கம். காஞ்சிபுரம் எஸ் சொக்கலிங்கம். கே. கோவிந்தசாமி, சேலம் வெமபட்டி என். பழனிசாமி இராசிபுரம் ஏ இராமசாமி, மோகனூர் க. வேலுச்சாமி. குழந்தைவேலு, இராமையா, தருமபுரி இண்டூர் அ சதாசிவம். சேலம் வைகுந்தம் வி- எம் . இராமசாமி, ஒலக்கூர் வி. பாலசுந்தரம். கோவை கருப்பண்ணன். இடைப்பாடி ஈ; மாணிக்கம், ஏ. சுகுமார். கே. பி. ஆறுமுகம். தர்மபுரி திருவள்ளுவர் நகர் கே, இளங்கோவன், அம்மாபேட்டை வெ. மாணிக்கம் திருச்சி சேப்பம்பாளையம் கே. டி. பாலசுப்பிரமணியம், உடையாபட்டி ஏ சீனிவாசன் வையாபுரி அம்மாபேட்டை என். கோவிந்தசாமி, தடாகப்பட்டி கே வி. கஸ்தூரி, மேட்டூரணை என். வி சொகுசு எருமாபாளையம் எம். காளியப்பன், ஈரோடு ஈ. வெ. ரத்தினவேலு. காசிபாளையம் கே. ஆர். சின்னசாமி ஆகிய 36 பேர் ரு. 5- வீதம் 180—00

கோவை சக்திநகர் வி. வெங்கிடுசாமி. சேலம் பூச்சாங்கொட்டை ஜி. கே. கோவிந்தன் கே. எஸ் மணி, டி. ஜனார்த்தனன் பிரதர்ஸ் கந்தசாமி. அம்மாபேட்டை கே. ராமசாமி வீரவநல்லூர் எஸ் ரத்தினம், எம். எம். ஆமிறள், லெ சங்கரலிங்கம், நாங்குநேரி டி. ஏ. ஜீவா, வி. பெருமாள், மதுரை மா பொ. தியாகராசன், புத்தாமரைப்பட்டி ஏ: எஸ் வி. அசோகராஜ் பீடிகுளம் ஏ. அர்ச்சுனன் ஆகிய 14 பேர் ரு 5- வீதம் 70—00

ஆகமொத்தம் ரு 67,607—03

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25.00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

அ. தி. மு. க. ஆட்சியில் இலஞ்சம்!

"புதுவை மாநில அரசு பற்றி எண்ணற்ற லஞ்சப் புகார் மனுக்கள் வந்துள்ளன. இதை அறிந்து நான் அதிர்ச்சிக்கு உள்ளானேன்" தமிழக ஆளுநரும் தற்போதைய புதுவை மாநில நிர்வாகியுமானபிரபுதாஸ்பட்வாரி புதுவை மாநில அரசு பற்றி இவ்வாறு 'சான்றிதழ்' வழங்கியுள்ளார்.

இலஞ்சத்தை முழுதும் ஒழிக்க நடவடிக்கை எடுக்கும்படிமுதலமைச்சர் ராமசாமியிடம் (!) கூறியதாக செய்தியாளர்களிடம் பட்வாரி சொன்னாராம்.

எப்படிப்பட்ட இலஞ்சப் புகார் என்பதும். எவரைப்பற்றி என்பதும் செய்தியாளர்களிடம் தெரிவிக்க மறுத்துவிட்டாராம்.

ஃ ஃ ஃ

தெய்வப் பிறவியும் தேவியும்!

ஐம்முவை அடுத்த ஒரு குன்றத்தில் தீரேந்திர பிரம்மச்சாரியின் ஆசிரமம் உள்ளது

யோகாசனம் பயிலும் மாணவர்களுக்கு மிகவும் வியப்புக்குரிய மதக் கருத்துக்களை இந்த யோகி போதிப்பது வழக்கமாம்.

குறிப்பாக, நடுத்தர வகுப்பைச் சார்ந்த தனது சீடப் பெண்களுக்கு, 'சஞ்சய் காந்தி சாதாரண மனிதரல்ல. தெய்வப்பிறவி; அவர் தீயவைகளை அழிக்கவும் நாட்டின் வளத்தைப் பெருக்கவும் இருக்கிறார்' என்று போதித்து வருகிறார்"

'அதுமட்டுமல்ல; இந்திரா காந்தி கடவுளின் அவதாரம். ஆவார். அந்தத் தேவியார் எதிரிகளையெல்லாம் தனது வரப்பிரசாதத்தால் அழித்து விடுவார்' என்றும் பிரச்சாரம் செய்து வருகிறாராம்.

விலைபோன எழுத்தாளரின் விபரீத வாதம்!

'முற்போக்கு எழுத்தாளர் என்ற 'லேபிள் குத்திக்கொண்டு பிற்போக்குத்தனமான கருத்துக்களையும், பெண்ணடிமைத் தனத்தையும் வெகு இலாவகமாகத் தனது கதைகளில் புகுத்தி வரும் ஓர் எழுத்தாளர். இன்னொரு இலக்கிய வியாபாரியான எழுத்தாளர் ஒருவரின் வார இதழில் 'வாக்கு மூலம்' அளித்து வருகிறார்.

தனது வாக்குமூலத்தில்' குயுக்தியான வாதங்களை வெளியிடும் இந்த எழுத்தாளரின் கடந்த காலத்தைச் சற்று நாம் நினைவு கூருதல் வேண்டும்

இந்திராவால், தி மு. க. ஆட்சி நீக்கப்பட்டபோது இவர்போல் 'ஆனந்தக் கூத்தாடியவர் வேறு யாரும் இல்லை எனலாம்.

அது மட்டுமல்ல —

'நெருக்கடி நிலையை, ஆதரித்து இடைவிடாது 'லாலி' பாடியவர்களில் இவர் முக்கியமானவர்

அப்போது இவர், தி. மு கழகத்தை எதிர்த்துக் கடுமையாகவும், இடைவிடாதும் பிரசாரம் செய்தவர் "அதன் ஆட்சி நீக்கப்பட்டது குறித்து எனக்கு மகிழ்ச்சியே..." என்று தமது உள்ளக்கிடக்கையை வெளியிட்டவர்.

இப்போது இவர் —

"— எனவே அண்ணாதுரையின் அன்றைய வாசகங்களை மேலும் செழுமைப்படுத்தித் தற்காலச் சூழ்நிலைக்குப் பொருந்த நான் இங்கே மீண்டும் இவ்விதம் சொல்கிறேன்.

நம் மீது அதிகாரம்செலுத்திக் கொண்டிருக்கிற தற்கால வடவர்கள் நம்மவரும் அல்லர்; நல்லவரும் அல்லர்..." என்று கூறுகிறார்

அறிஞர் அண்ணாவின் வாசகங்களை இப்போது அங்கீகரிக்கும் இந்த எழுத்தாளர்கடந்த காலத்தில் அண்ணா மீது எவ்வளவு 'மதிப்பும் மரியாதையும்' வைத்திருந்தார்என்பதை யாரும் மறந்துவிடவில்லை.

ஒருமுறை இவர்,

— "அண்ணா நரையே ஒரு புற்று; புற்றுக்கு ஒரு புற்று...?" என்று சொன்னார்.

— இவ்வாறு வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் தி.மு கழகத்துத் தலைவர்கள் மீது புழுதி வாரி இறைத்த இந்தப் 'பதர்' (பதர் என்ற சொல் இவருக்கு மிகவும் விருப்பமானது) இப்போது, "வடவர்கள் நம்மவரும் அல்லர்; நல்லவரும் அல்லர்' என்று கூறுவது, 'புதிய ஞானோதயம்' ஏற்பட்டதால் அல்ல!

'பிரிட்டிஷ்காரர்களைப் போன்றே இன்றைய வடபுலத்துத் தலைவர்கள் மிகவும் கொடியவர்கள்' என்றுகூறி 'வஞ்சிக்கப்பட்ட' வடபுலத்து இந்திய மக்களுக்காக இந்த எழுத்தாளர் அனுதாபப்படுகிறார்

அதுவும் எப்பேர்ப்பட்ட வடபுலத்து இந்திய மக்கள் தெரியுமா?

—"வடபுலத்தில் வாழ்கிற இந்திய மக்கள் நம்மைவிடவும் மிகுந்த தேச பக்தியும், வீரமும், போர்க் குணமும் உடையோர் ஆவர்."

இந்த எழுத்தாளரின் கண்ணோட்டத்தில் தென் இந்திய மக்கள் — தமிழர்கள் உட்பட — தேசபக்தியிலும், வீரத்திலும், போர்க்குணத்திலும் வட இந்திய மக்களைவிடத் தாழ்ந்தவர்கள்....

நவீன பீட்டில்ஸ் கோலம் பூண்டிருக்கும் இந்த எழுத்தாளரின் காமாலைக் கண்களில் கப்பலோட்டிய தமிழர்களும், பாரதியார்களும், பாரதிதாசன்களும், வாஞ்சிநாதன்களும், திருப்பூர் குமரன்களும், படாமற் போனதில் வியப்பில்லையே— மேலும் இவர் சொல்கிறார் —

சித்தார்த்தன்

திலகர், லாலாலஜபதிராய், பிபின் சந்திரபாலர், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு — போன்றவர்கள் வடவர்களாக இருந்தபோதிலும் நம்மவர்களாம்......நல்லவர்களாம்...

(இந்திரா காந்திகூட நம்மவர்தானாம் ... ஆனால் நல்லவர் இல்லையாம்...எந்த இந்திராவை 'ஆதிபராசக்தி' என்று நெருக்கடி நிலையின்போது தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினாரோ அதே இந்திராவைத்தான் நல்லவர் இல்லை என்று, இன்று கூறுகிறார் இந்த எழுத்தாளர்)

இவர் —

'நம்மவரும் அல்லர்...நல்லவரும் அல்லர்...' என்று சாடுவது ஜனதாக் கட்சித் தலைவர்களைத்தான்!

அதற்கு இவர் கூறும் காரணங்கள்:

— "திலகர் தொடங்கி காந்தி வரை வந்த வழியிலிருந்து அது (இன்றைய இந்தியா) முற்றாக விலகி, ஐரோப்பிய — அமெரிக்க — பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் கூட்டுச் சதியில் விழுந்தது என்பதல்லாமல், இன்றைய இந்திய நிலைமைக்கு வேறு என்ன பொருள்?"

—"...சோஷலிசம் என்ற வார்த்தையையே ஒதுக்கி, உலக ஏகாதிபத்திய நாடுகளோடு சுதந்தரமாக உறவு வைத்து, இந்தியாவில் அந்நிய மூலதனக்காரர்களுக்கும் உள்நாட்டுச் சுரண்டலாளர்களுக்கும் வேட்டைக் களமாக்கிவிடும் விபரீத நிலையை, எப்படியேனும் நம் காலத்தில் நாம் மாற்றி அமைத்தல் வேண்டும்—

இந்த எழுத்தாளர் குறிப்பிடும், அமெரிக்க — பிரிட்டிஷ் கூட்டுச் சதிக்கும், அந்நிய மூலதனக்காரர்கள் உள்நாட்டுச் சுரண்டல்காரர்கள் ஆகியோரின் வேட்டைக் காடாக இந்தியா பலியானது இன்றுதான் புதிதாகத் தோன்றிய ஒரு நிலை அல்ல

இந்த இழிநிலை இந்திரா காலத்திலேயே ஏன் — அவருடைய அருமைப் பிதா'வான நேரு காலத்திலேயே தோன்றியதாகும் — நேரு என்ன, வெள்ளைக்கார முதலாளிகள் இந்தியாவில் தொழில் நடத்திக் கொழுத்த இலாபங்களைத் தங்கள் நாடுகளுக்குக் கொண்டு போகக் கூடாது என்று, இரும்புத் தாழ்ப்பாள் ஏதாவது போட்டுத் தடுத்தாரா?

அல்லது—

பிர்லாக்கள், டாடாக்கள் முந்திராக்கள் கோயங்காக்கள் போன்ற உள்ளூர்ச் சுரண்டல்காரர்களின் உயர உயரப் போகும் இலாப வேட்டைக்கு ஒரு வரம்பு கட்டினாரா?

இந்தியாவை 'ஆட்கொள்ள' வந்த அவருடைய புதல்வி இந்திரா கோலோச்சிய போதுதானே அமெரிக்கா தனது உளவுக் கருவியை இந்திய மலைச் சிகரத்தில் ஒளித்து வைத்தது?

இவைகளையெல்லாம் இந்த எழுத்தாளர் மறந்துவிட்டாலும், அல்லது மறந்துவிட்டதுபோல் 'பம்மாத்து' பண்ணினாலும் மக்கள் மறக்கத் தயாராக இல்லை. இந்த எழுத்தாளரின் இன்றைய 'வாதம்' என்னவென்றால் —

இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து விடுதலை பெற்று, இந்தியாவின் இன்றைய வடபுலத்து ஏகாதிபத்திய வாதிகளிடம் சிக்கிக் கொண்டது என்பதுதான்

—ஒப்புக்கொள்ளுகிறோம்! ஆனால் —

இவர்களுக்கு (ஜனதாவினருக்கு) முன்னால் இருந்தவர்களும் வடபுலத்து ஏகாதிபத்திய வாதிகளைப் போலத்தானே தென்னிந்திய மக்களைப் பொறுத்தவரை - குறிப்பாகத் தமிழர்களிடம் நடந்து கொண்டார்கள்.

இதை ஒத்துக் கொள்ள, 'உலகத்திலேயே தன்னை விடப் பெரிய கொம்பன் யாருமில்லை என்று சுய தம்பட்டம் அடிக்கும் இந்த மகாப் பெரிய கொம்ப எழுத்தாளருக்குத் தெம்பு இல்லையே......

—"நம்மைவிட மக்கள் தொகையில் குறைந்தவர்கள்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

கழக ஏடுகள் - கழகத்தோழர்கள் கடமை

இன்றைக்கு ஏராளமான ஏடுகள் இருக்கின்றன அந்த ஏடுகளிலே நம்முடைய செய்திகள் தாராளமாக வரவும் செய்கின்றன. பல ஏடுகளிலே நம்முடைய செய்திகள் இருட்டடிப்பும் செய்யப்படுகின்றன.

இவைகளுக்கிடையே, நமக்கென்று இருக்கின்ற நாளிதழ்கள் முரசொலி — அலைஓசை — தினகரன் போன்ற நம்முடைய கழக நாளேடுகள் என்ற அளவிலே உள்ளன

இவைகள் இருந்தாலும் வார ஏடுகள் நமக்கு மிகமிகக் குறைவு. 'நம்நாடு' கழகத்தின் சார்பாக நடத்தப்பட்டு வருகிறது ஒரு கழகம் அல்லது எந்த ஒரு கட்சியானாலும் அந்தக் கட்சியின் சார்பாக நடத்தப்படுகிற ஏடு எவ்வளவு வெற்றிகரமாக நடைபெற இயலும் என்பதை யாரும் அறியாதவர்கள் இல்லை.

இந்த வகையிலேதான் இன்றைக்கு "நம் நாடு" இதழ் இருபதாயிரம், இருபத்து ஐயாயிரம் பிரதிகள் என்ற அளவுக்கு விற்பனையாகிறது என்றாலும் கூட, இழப்புக்கிடையிலேதான் அதை நடத்த வேண்டிய சூழ்நிலை கழகத்திற்கு இருந்து வருகிறது.

அதே நேரத்தில் பேராசிரியர் விடுத்த வேண்டுகோளை நான் உங்களுக்கு வழிமொழிந்து விடுத்திட விரும்புகிறேன்:

நம்முடைய ஏடுகளை நீங்கள் வாங்கிப் படிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அப்படி அவர்கள் சொன்ன தற்குக் காரணம் 'இனமுரசு' ஆனாலும், நம்நாடு அல்லது நம்முடைய கழக ஆதரவு ஏடுகள் எதுவானாலும் அந்த ஏடுகளை நீங்கள் இன்று முதல் இரவல் வாங்கிப் படிப்பது என்பது இல்லை என்று சபதம் மேற்கொள்ள வேண்டும்.

ஒருவர் படிக்கும் பொழுது அதை எட்டிப் பார்த்தே விஷயத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்கிற அந்தத் தந்திரத்தை இன்று முதல் மறந்துவிட வேண்டும். ஆளுக்கொரு பத்திரிகை நாமே வாங்க வேண்டும்.

நம்முடைய கழகத்திற்கு என்று படிப்பகங்கள் மன்றங்கள், துணைமன்றங்கள், கிளை அமைப்புக்கள் நிறைய இருக்கின்றன அவைகளுக்கு ஒரு பத்திரிகை வாங்கிப் போட்டால் பத்துப்பேர் படித்துவிடலாம் என்கின்ற அந்த சிக்கன முறையையும் கூட கொஞ்ச நாளைக்கு நீங்கள் ஒத்திவைக்க வேண்டும்.

படிப்பகத்திற்கு என்று ஒருபத்திரிகை வாங்கினால் அதைப் பொது மக்கள் எடுத்துப்படிப்பதற்கு வசதியாக, வாய்ப்பாக அதை விட்டுவிட்டுக் கழக நண்பர்கள் ஆளுக்கொரு பத்திரிகை அது முரசொலியானாலும் தினகரன் ஆனாலும் இன்றைக்கு வெளியிடப் படுகிற இனமுரசானாலும் இவைகளை வாங்கித்தீர வேண்டும்

இவ்வளவு பத்திரிகைகளையும் வாங்குவதற்குக் கையிலே காசு இருக்கிறதா என்று யாரும் என்னைப்பார்த்துக் கேட்கக் கூடாது எப்படி வாங்குவீர்களோ தெரியாது. வாங்கித் தீர வேண்டும்.

— கலைஞர்

('இனமுரசு' வெளியீட்டு விழாவில்)

வரலாற்றைத் திரிக்கிறார் 'ஆஸ்தான' கவிஞர்!

அர்த்தமுள்ள இந்து மதம் எழுதி, 'காஞ்சிப் பெரியவாளிடம் சபாஷ் பெறுவதையே புனிதத் திருப்பணியாகக் கருதும் ஆஸ்தானக் கவிஞர்,' காஞ்சி அண்ணன் தொடங்கிய தி.மு கழகத்தின் வரலாற்றையும் எழுதத் தொடங்கியிருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது!

அதுவும் போயும் போயும் நாவலர் நடத்தும் பத்திரிகையிலா? வெளியிலே சொல்லவும் வெட்கமாக இருக்கிறது!

தி.மு கழகத்தின் அடி நாள் வரலாறு இப்பொழுதுள்ள இளந் தலைமுறையினருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று நினைத்துக் கொண்டு, வரிக்கு வரி சரடு விட்டிருக்கிறார்!

புரட்டுத் தலைவரின் 'புதிய உறவு கிடைத்தும் ஏற்பட்ட 'ஞானோதயம்' அவரை பழைய வரலாற்றைப் புரட்டச் செய்திருக்கிறது; 'புரட்டுத் தலைவரிடம் சபாஷ் பெறுவதற்காக உண்மை வரலாற்றையே புரட்டி' எழுதத் துணிந்திருக்கிறார்.

'நான் நினைத்துப் பார்க்கிறேன்' என்று சொல்லி நடந்த நிகழ்ச்சிகளையே தமது விருப்புக்கும், இன்றைய தமது நிலைக்கும் தக்கவாறு மாற்றிப் பிதற்றியிருக்கிறார்.

"1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ம் தேதி, சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது, அந்த மேடையில் இருந்தவர்களில் நானும் ஒருவன்."

எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? பழைய நினைவுகள் என்ற பேரால் தமது சுய புராணத்தைத் தொடங்கியிருக்கிறார்!

நல்ல வேளை கழகம் தொடங்கியவர்களிலேயே நானும் ஒருவன்' என்று சொல்லாமல் போனாரே.

1949-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் நாள் சென்னை ராபின்சன் பூங்காவில் தி மு. க. தொடக்க விழா நடந்தபோது இந்தக் கவிஞரை நாட்டுக்கும் தெரியாது. கழகத் தொண்டர்களுக்கும் தெரியாது. ஏன், அண்ணாவுக்கோ, மற்ற முன்னணித் தோழர்களுக்கோ கூடத் தெரியாது! இவர் எப்படி மேடைக்குப் போனார்?

அன்று வரை திராவிடர் கழகத்தில் இருந்தவர்கள் தாம், அதிலிருந்து பிரிந்து தி. மு க. அமைத்தார்கள். இந்தக் கவிஞரும் திராவிடர் கழகத்தில் உறுப்பினராக இருந்து பிறகு விலகி தி மு. க. மேடைக்கு வந்தாரா? அதுவுமில்லை. நெற்றியில் 'பட்டை'யாகத் திருநீறும், குங்குமப் பொட்டும் வைத்துக்கொண்டிருந்தவர் அன்றைய விழாவில் கலந்துகொண்டார் என்றால் எந்த மடையனாவது நம்புவானா?

"தி.மு.க. தொடங்கியபோது அந்த விழாவுக்கு நானும் வேடிக்கை பார்க்கச் சென்றிருந்தேன்' என்று எழுதியிருந்தால் அதில் ஓரளவேனும் உண்மை இருக்க முடியும்.

அவர் அன்றைய கூட்டத்திற்கு வந்திருந்தார் என்பது உண்மை எப்படி வந்திருந்தார்? எங்கே அமர்ந்திருந்தார் என்பது வேறு எவருக்கும் தெரியாது என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்.

தி. மு. க. தொடக்க விழாவுக்குக் கலைஞர் வந்தபோது அவரோடு அவருடைய காரில் ஒட்டிக்கொண்டு வந்தவர்களில் இந்தக் கவிஞரும் ஒருவர். (அப்போது இவருக்குக் கவிஞர் என்ற பட்டம்கூடக் கிடையாது அதன் பிறகு சில ஆண்டுகள் கழித்து, கலைஞரால்தான் கவிஞர் என்ற பட்டமும் வழக்கப்பட்டது)

காரில் வந்த கலைஞர் நேரே மேடைக்குச் சென்று அமர்ந்து விட்டார். இந்தக் கவிஞரும் அவருடன் வந்திருந்த சிலரும் மேடைக்கு சுமார் நூறடி தொலைவிலே தரையில் கூட்டத்தினரோடு சேர்ந்து அமர்ந்திருந்தார்கள். பின்னர் கூட்டம் முடிந்ததும், கலைஞர் கீழே இறங்கி வந்து இவர்களை காரில் அழைத்துக்கொண்டு சென்றார். இதுதான் உண்மை. (அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவராலேயே இது எழுதப்படுகிறது என்பதை உணர்ந்து கொள்க)

இதற்குச் சான்று வேண்டுமானால் இப்போது அ. தி. மு. க.வில் இருக்கும் முன்னாள் குடிசை மாற்று வாரியத் தலைவரையே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அப்போது அவரும் உடனிருந்தார். (அவர்தான், இந்தக் கட்டுரையாளருக்கு அந்தக் கவிஞரை அறிமுகம் செய்து வைத்தார்.)

'இவர் யார்?' என்று கட்டுரையாளர் கேட்டபோது' இவர் சினிமாவுக்குப்பாட்டு எழுதிக்கொண்டிருப்பார்; இவருடைய பெயர் ....என்று கூறினார். அப்போது அவர் நெற்றியில் வெண்ணீறும் குங்குமப் பொட்டும் பளிச்சென்று காட்சியளித்தன.

தி. மு. க. தொடங்கி, சில ஆண்டுகளுக்குப் பின்னர்தான், கலைஞர், பொள்ளாச்சியில் நடந்த ஒரு கூட்டத்தில், இந்தக் கவிஞரை அறிமுகப்படுத்தி, அவருக்குக் கவிஞர்' என்ற அடைமொழியையும் முதன் முதலாக வழங்கினார் என்பது. அவராலேயே மறுக்கமுடியாத வரலாற்று உண்மை!

ஆஸ்தான கவிஞர் எழுதத் தொடங்கிய வரலாற்றின் தொடக்கமே இப்படியிருக்கிறது. இந்த இலட்சணத்தில் அவர் தொடர்ந்து அந்த ஏட்டிலேயே எழுதப் போகிறாராம் வரலாறு எப்படி அமையுமோ! நாவலருக்குத்தான் வெளிச்சம்!

அவர் தொடர்ந்து எழுதட்டும்; நாமும் படித்துச் சிரித்துவிட்டு, மறுக்கவேண்டியதையும் மறுப்போம்.

— சேனா

சத்திய சோதனை நடத்த 'சத்தியபுத்திரர்' தயார்தானா?

தி. மு. க. விலிருந்து எத்தனைபேர் வந்தாலும், என்னையே கொலை செய்ய வந்தவர்களாக இருந்தாலும், என்னைத் தாக்க வந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மனம் திருந்தி இங்கு வருவார்களேயானால் அவர்களையெல்லாம் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்; அப்படிப்பட்டவர்கள் நம்மைச் சேருகின்ற காலத்தை எதிர்பார்த்து இருக்கிறேன்; நீண்டநாள் காத்திருக்கவும் தயாராயிருக்கிறேன்.

— எம். ஜி. ராமசந்திரன்

தமது கட்சியில் சேர வருபவர்கள் அனைவரையும் கண்ணை மூடிக் கொண்டு சேர்த்துக் கொள்ளப் போவதில்லையென்றும், வந்து சேருபவர்கள் ஊழல் செய்தவர்களா என்பதை விசாரித்து அறிந்துதான் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும், ஏற்கனவே தி. மு. க.விலிருந்து வந்து சேர்ந்தவர்கள்மீது ஊழல் புகார் இருந்தால் அவர்களும் விசாரணைக்கு உட்படுவார்கள் என்றும் புரட்சியார் அறிவித்திருந்தாரே அது என்ன ஆயிற்று?

மதுரை முத்துவிலிருந்து கடைசியாக அவர் கட்சிக்குப் போய்ச்சேர்ந்தவர் உட்பட அனைவரும் 'இந்தச் சத்திய சோதனை'க்கு உட்படுவது எக்காலம்?

இனிச் சேர வருபவர்களுக்கும் இந்தச் 'சத்திய சோதனை' உண்டா?

தமது கட்சிக்காரர்கள்மீது ஊழல் புகார் இருந்தால் அதனை விசாரிப்பதற்காகவே முன்னாள் நீதிபதி ஒருவர் (செங்கல்பட்டு வெங்கடேசன் என்பவர்) நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டதே! அவர் என்ன ஆனார்?

அந்தோ தொழிலாளர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டதற்கு நிர்வாகத்திலுள்ள தொழிற்சங்கத் தலைவர்களே காரணம் என்று இராகவானந்தம் பகிரங்கமாக சட்டமன்றத்திலேயே குற்றச்சாட்டினார்.

கெரோ செய்வதை எந்தச் சூழ்நிலையிலும் இந்த சர்க்கார் அனுமதிக்காது என்று சட்டமன்றத்திலேயே திட்டவட்டமாகக் கூறினார். இதில் மேற்கு வங்க மார்க்சிஸ்ட் சர்க்காரையே தானும் பின்பற்றுவதாக அறிவித்தார்.

டி. வி. எஸ். தொழிற்சாலையில் பழிவாங்கப் பட்ட தொழிலாளிகளை மீண்டும் வேலையில் சேர்க்கும் பேச்சுக்கே இடமில்லை என்ற நிர்வாகத்தின் அறிப்பை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

போக்கு வரத்துத் தொழிலாளர் போராட்டத்தின் போது தொழிற் சங்கப் பிரதிநிதிகளிடம் முறைகேடாக நடந்து கொண்டார். கூட்டத்தைவிட்டு அமைச்சரே வெளிநடப்புச் செய்து சரித்திரம் படைத்தார்.

அவருடைய நடவடிக்கையை ஆதரித்துத் தொழிற்சங்கத் தலைவர்களைக் கடுமையாகச் சாடி, முதலமைச்சர் நிருபர்களிடம் பேட்டியளித்தார். அடுத்த நாளே அவசரச் சட்டமும் போட்டார். இந்த நாடகத்தின் பின்னணியில் தான் மதுரை மாநகராட்சித் தேர்தலில் இடதும், வலதும் எம். ஜி. ஆருடன் கூட்டணி அமைக்கின்றன. புரட்சிகரமான கூட்டணிதான்! அத்தோடு நிற்காமல் உண்ணாவிரதம், ஊர்வலம், தீர்மான நாடகங்கள்

அந்தோ, தொழிலாளி வர்க்கமே நீ யாரைத்தான் நம்புவது?

வாழ்க 'அண்ணா நாமம்' வெல்க 'மார்க்சிய மெய்ஞானம்!' புரட்சித் தலைவர் லெனின் — மன்னிக்கவும்! எம். ஜி. ஆர். நாமம் நீடூழி வாழ்க!

★

சாயிபாபா மோசடி அம்பலம்!

பி சி சர்க்கார் (ஜூனியர்) ஒரு வித்தைகாட்டுபவர் மொகலாய மன்னர் ஜகாங்கீர் காலத்திலிருந்து அவருடைய முதாதையர் இதைப் பரம்பரைத் தொழிலாகவே செய்து வருகிருர்கள். புகழ்பெற்ற அவருடைய தந்தை ஜப்பானில் வித்தைகள் காட்டிக் கொண்டிருந்தபோது அகால மரணமடைந்தார்.

வித்தை (MAGIC) என்பது மாயமோ, மந்திரமோ அல்ல என்றும் சில தந்திரமான திறமைகளைத் தவிர வேறென்றும் இல்லை என்றும் கூறும் சர்க்கார். எந்த ஒரு காரியம் நடப்பதற்கும் ஒரு காரணம் தேவை என்றும், விஞ்ஞானத்தை விஞ்சியது எதுவும் இல்லை என்றும் ஆணித்தரமாகக் கூறுகிருர்.

சாதாரண வித்தைகள் காட்டுகிறவரான சாயிபாபா தன்னைக் கடவுளின் அவதாரம் என்று சொல்லிக்கொண்டு எப்படி 'எத்து' வேலைகள் செய்து வருகிருர் என்பதை சர்க்கார் படம் பிடித்துக் காட்டுகிருர்.

சாயிபாபா 'சித்து' வேலைகள் செய்யும் 'சித்தர்' அல்லர் அவர் எத்தரே என்பதை இன்னமும் உணராதவர்கள் இனியேனும் உணர்ந்து கொள்வார்களாக.

சாயிபாபா ஒரு மோசடிக்காரர். அவரும் சாதாரணமான ஒரு வித்தைகாட்டுபவர் தான் என்பதை அவர் ஒப்புக் கொள்வதில்லை 'கடவுள் அவதாரம்' என்று சொல்லிக் கொள்ளும் அவரைப் போன்ற எந்த மனிதனாக இருந்தாலும் அவருடைய சக்திகளை பரிசோதித்துக் காட்டுவதற்குச் சவால் விடுகிறேன் அவருடைய உண்மை உருவைப் படம் பிடித்துக் காட்ட ஒரு நீண்ட சந்திப்பு அவருடன் எனக்கு ஏற்பட்டால் போதும்.

"மோசடிக்காரனுக்கும் மோசடிக்காரர்' இந்த சாயி பாபா காரண காரியமான இந்த விஞ்ஞான காலத்தில். மக்களின் மனப்போக்கை தன்னுடைய சுயநலத்திற்குப் பயன் படுத்திக் கொள்கிருர் பாபா. இவ்வையத்தில் ஒவ்வொரு பொருளும் விஞ்ஞானரீதியாகவும், காரண காரியத்தோடும் விளங்குகிறது. காரண காரிய மற்றுத் தோற்றுவிக்கப்படும் பொருட்கள் 'அற்புதத்தின்' பாற்பட்டதல்ல; வெறும் தந்திரங்களே

மனிதரின் மனப்பாங்னுக்கு இது கேடு விளைவிக்கிறது இவர் ஒரு மனிதனுக்கும் மேற்பட்டவர் (SUPER MAN) என்ருல். இவர் பிறந்த மண்ணான ஆந்திராவைப் பெரும் புயல் தாக்கியபோது கையாலாகாத் தனத்தோடு இவர் இருந்தது ஏன்?

சாயிபாபாவின் சக்திகளைக் கண்டுபிடிக்க பேராசிரியர் நரசிம்மையாவின் தலைமையில் பணியாற்றிய குழுவில் நானும் இடம் பெற்றேன்.

ஒரு முறை சாயிபாபாவோடு எனக்கு ஏற்பட்ட குறுகிய சந்திப்பு சுவையானது

பி சி சர்க்கார் என்ற என் பெயரைச் சொல்லி நானாகச் சந்திக்க முதலில் முயன்றேன். ஆனல் சாயி பாபா எனக்குப் பேட்டி தர அப்போது மறுத்துவிட்டார். பிறகு ஒரு 'பையன்' என்று சொல்லிக் கொண்டு, 'ஜகர்' என்ற புனைபெயரில் அவரிடம் போனேன். பேட்டி தர பாபா இம்முறை ஒப்புக் கொண்டார்

சந்திப்பின்போது எந்த வித மரியாதையையும் அவருக்கு நான் அளிக்கவில்லை எல்லோரையும் போல் அவர் பாதங்களைத் தொட்டுக் கும்பிடவுமில்லை!

காற்றில் தனது கரங்களை அசைத்து ஒரு சந்தேஷ் (இனிப்புப் பண்டம்) வரவழைத்துக் காட்டினர் பாபா - அது அவருடைய உள்ளங்கையில் ஒளிக்கப்பட்டிருந்தது). அதை அவர் எனக்குத் தந்தபோது பதிலுக்கு நான் என்னுடைய கரங்களைக் காற்றில் அசைத்து ஒரு 'ரசதல்லா' (இனிப்புப் பண்டம்) வரவழைத்து அவரிடம் நீட்டினேன்.

★★★★★-★★★★★★

ஜாகீர்

★★★★★-★★★★★★

அவருக்கு இணையாக நான் செய்து காட்டிய 'அற்புதத்தை விரும்பாத பாபா பலந்த அதிர்ச்சி அடைந்தவராய் கூக்குரலிட்டார்!

பிறகு நான் பாபாவிடம். "நான்தான் பி சி சர்க்கார் (ஜூனியர்) நான் எதைச் செய்கிறேனே அதையேதான் நீங்களும் செய்கிறீர்கள். என்னைப் போல் நீங்களும் ஒரு வித்தை காட்டுபவர் தான்! மீண்டும் நாம் சந்திப்போம்.' என்று மெதுவாகச் சொல்லி விட்டு அமைதியாக வெளியேறினேன்.

சாயிபாபாவின் படங்களிலிருந்துதானகவே 'புனிதமான திருநீறு' கொட்டுகிறதே, அதுவும் எப்படி என்று விளக்குகிறேன், லாக்டிக் ஆஸிட்' (LACTIC ACID) கட்டிகளை ஒரு படத்தின் மீது தடவி சற்று நேரம் கழித்துப் பார்த்தால், பாபா சொல்லுகின்ற அந்தப் 'புனிதமான திருநீறு' படத்தின் மீது நிறையப் படிந்திருப்பதைக் காணலாம். இவையனைத்தும் விஞ்ஞான ரீதியான தந்திரங்களே.'

நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் சாயி பாபாவின் 'ஏஜண்டுகள்' அவரை கடவுள் அவதாரமாக்கத் திட்டமிட்டு பிரச்சாரம் செய்து வருகிருர்கள்.

முப்பெரும் தத்துவ மோதிரங்கள்!

மேற்படி மோதிரங்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. பல் ஆண்டுகள் உழைக்கக் கூடிய ஒரு மோதிரம் விலை ரூ. 15. தபால் செலவு தனி. உங்களுக்கு தேவையான மோதிரத்தைக் குறிப்பிட்டு உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து, ரூ. 3 அட்வான்சுடன் அனுப்பினல், மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் மோதிரத்தை V. P. P மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு. (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்-
"போட்டோ வீனஸ்" 104, C. N. K. ரோட், சென்னை-600 005.
PHOTOGRAPHERS (ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

சூரியகாந்தி விவகாரம் சூடு பிடிக்கிறது !

விவசாயத் தொழில் வளர்ச்சிக் கழகம் என்ற ஒரு நிறுவனம் சென்னை கிண்டியில் இருக்கிறது இதை ஒரு பெரிய ஐ. ஏ. எஸ். அதிகாரி நிர்வகித்து வருகிருர்.

இந்த ஆண்டு இந்த நிறுவனம் 75 இலட்சத்திற்கு சூரியகாந்தி எண்ணெய் வாங்கி இருக்கிறது. இது முறைப்படி நடைபெறவில்லை.

இந்த நிறுவனத்தில் உள்ள மற்ற டைரக்டர்களுக்குக் கூடத் தெரியாமல் நடைபெற்றிருக்கிறது.

இந்த விவகாரம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. உடனே இந்த ஐ. ஏ. எஸ். அதிகாரியை மாற்றினுர்கள். அந்த அதிகாரி அமைச்சரைக் குற்றம் சாட்டினுர். அவரை மிரட்டினுர்கள்.

அவர் வேலையை விட்டுத் தானகவே ஓய்வு பெற்று விடுவதாக அரசுக்கு நோட்டீசு கொடுத்தார். அந்த நோட்டீசில் சில முக்கியமான விவரங்களையும் எழுதிவைத்தார். இத்தக் கடிதம் டெல்லிக்கு அனுப்பப் பட்டால் பல ஊழல்கள் வெட்ட வெளிச்சமாகிவிடும். காரணம். ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் பற்றிய முடிவை டெல்லிதான் எடுக்க வேண்டும்.

இது சம்பந்தமாக புரட்சியார் அரசு விழிக்கிறதாம். இந்த நோட்டீசின் படி அந்த ஐ. ஏ. எஸ். அதிகாரியை விடுவித்தால் எம். ஜி. ஆர். ஆட்சியின் ஒழுங்கு ஊர் சிரிக்க ஆரம்பித்து விடும். இந்த விவகாரத்தைத் தலைமைச் செயலகத்தில் உள்ளவர்கள் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிருர்கள்.

இந்தச் சமயத்தில் தன்னை வந்து சந்திகும்படி அமைச்சர் ஒருவர் ஐ. ஏ. எஸ். அதிகாரிக்கு தாக்கீது அனுப்பினுர். அதற்கு அந்த அதிகாரி 'வரமுடியாது' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாராம். மூத்த அதிகாரிகள் தங்களுக்கு மதிப்புத்தரவில்லைஎன்பது அமைச்சர்களின் குமுறல் "நாங்கள் எப்படி இவர்களை மதிப்பது- இவர்கள் அமைச்சர்கள் மாதிரி நடந்து கொண்டால் தானே மதிக்க முடியும்" என்பது அதிகாரிகளின் பதில். இப்படியாக இருந்து வருகிறது- இந்த சூரிய காந்தி எண்ணெய் விவகாரம்.

(நன்றி: 'தீ' 16-7-78)

M. K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41 ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50. ஏரிக்கரை ரோடு. சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை. சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை'

தொலைபேசி:கடை:33213 இல்லம்:31922
நாம்நாடுவோர்தவறுமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு:விற்பனை நிலையம்
92.திருப்பரங்குன்றம்சாலை மதுரை 11



உரிமையாளர்
பே.தேவசகாயம்

தனிச்சிறப்பு:சீலேபி,தேக்கத்திமிட்டாய்,அதிரசம், இனிப்புசேவு,பக்கவடா,மிக்சர்,முருக்கு,கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

கிளைகள்: 261.மேலமாசி வீதி, 70-சுவாமிசன்னதி
12.அழகர்கோவில்சாலை.72 டவுன்ஹால்ரோடு,மதுரை.







துணைப் பொதுச் செயலாளர் நியமனம்

பொதுச் செயலாளர் அறிவிப்பு

கழகச் சட்ட திட்டங்களின்படி கழகத் தலைவர் கலைஞர் அவர்களைக் கலந்து எடுத்த முடிவுக்கு ஏற்ப, கீழ்க்கண்ட தோழர்கள் அந்தந்தத் துறைக்கான தலைமைக் கழகச் செயலாளர்களாகவும், அந்தந்தக் கழகக் குழுக்களின் உறுப்பினர்களாகவும் இன்று முதல் நியமிக்கப்படுகிறார்கள்.

துணைப்பொதுச்செயலாளர் —
ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். பி.

அமைப்புச் செயலாளர்கள் -
1. நீலநாராயணன் எம்.எல்.சி. (நிர்வாகம்)
2. எஸ். எஸ். தென்னரசு (ஆக்கப்பணிகள்)

தலைமைக் கழகச் செயலாளர் —
என். வீராசாமி எம், எல். சி.

கொள்கைபரப்புச் செயலாளர் —
எஸ். கந்தப்பன் எம். ஏ.

கழக வெளியீட்டுச் செயலாளர் —
எல். கணேசன் பி. ஏ. பி. எல்.

மகளிர் அணிச் செயலாளர் —
அலமேலு அப்பாதுரை,

விவசாய அணிச் செயலாளர் —
வெ. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.பி.எல்.

தொழிலாளர் அணிச் செயலாளர் —
கே. சுப்பு பி.ஏ.பி,எல். எம்.எல்.ஏ.

சட்டத்துறைச் செயலாளர் —
என், கணபதி பி. எஸ்ஸி. பி.எல்.

சட்டத்துறைத் துணைச்செயலாளர் —
என்.வி.என்.சோமு, பி.ஏ.பி.எல்.

தொண்டர் அணிச் செயலாளர் —
இளம்பரிதி எம்.எல்.சி.

அலுவலகச் செயலாளர்கள் —
சி. குப்புசாமி, சா. கணேசன்

தலைமை நிலைய வழக்கறிஞர் —
டி.பி.ராதாகிருஷ்ணன் பி.ஏ.பி.எல்,

சொத்துப் பாதுகாப்புக் குழு

மன்னை நாராயணசாமி,
பி. டி. ஆர்.பழனிவேல்ராசன் பி. ஏ. பி. எல்.

தணிக்கைக் குழு

விருத்தாசலம் எம். செல்வராஜ் எம். எல். ஏ.,
கா. மு. கதிரவன்

இந்த நியமனங்களில் இடம் பெறுவோர், செயற்குழு. பொதுக் குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்படாதவர்களாயிருந்தால், அவர்கள் பொதுக் குழு செயற்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு, இந்த நியமனப் பொறுப்பை ஏற்கிறார்கள்.

மாணவர் அணிச் செயலாளர், மற்றும் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள் நியமனம் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

மாவட்டச் செயலாளரின் தலைமையில் ஏழு பேருக்குக் குறையாத பிரச்சாரக்குழு ஒன்றை மாவட்டச் செயலாளர்களைக் கலந்துகொண்டு அறிவிக்கப்படும்.

க. அன்பழகன்
பொதுச் செயலாளர்,
தி. மு. க.

'அறிவகம்'
சென்னை-13
17-7-1978









திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை -600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009